1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 25-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆடிமாதம் 2-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## குடும்ப செபமாலை ஏன் செபிக்கவேண்டும்?

போர்த்துக்கால் நாட்டின் லூர்தெனப் பாத்திமாவைச் சில சமயங்களில அழைக்கின்றனர். லூர்துகெபியில் தேவமாதா பதினெட்டுமுறை பெர்னதெத்தம்மாளுக்குக்காட்சிதந்து அவளைத் தம்முடன் செபமாலைசெபிக்கும்படி அழைத்தார். பாத்திமாவில் மாதாதந்த ஆறு காட்சிகளின்போதும் 'மக்கள் செபமாலை செபிக்க வேண்டுமென வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். செபமாலையைக் கையிலேந்தியவராய் அவர் காட்சிகொடுத்தார். கடைசிக் காட்சியின் போது: "நீங்கள் யார்? உங்களுக்கு என்னவேண்டும்?" என லூஸியா கேட்டாள். "நான் செபமாலைநாயகி. விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையைத் திருத்தித் தங்கள்பாவங்களுக்கு மன்னிப்புக்கேட்க வேண்டுமென நான் அவர்களை எச்சரிக்க வந்திருக்கிறேன். அவர்கள் இன்னும் தொடர்ந்து நமது ஆண்டவரை மனநோகப் பண்ணக் கூடாது. ஏற்கனவே அவரை மிகவும் மனநோகப்பண்ணியிருக்கின்றனர். அவர்கள் செபமாலைசெபிக்கவேண்டும்" எனத் தேவதாயார் பதிலிறுத்தார்.

கடந்தகாலத்திலே பலமுறைகளிலும் உலகத்துக்குப்பெரும் ஆபத்துக்கள் வரவிருந்தசமயங்களில் தேவதாயார்வந்து காப்பாற்றினர். இன்றும் உலகுக்குப் பெரும் ஆபத்து வரவிருக்கிறது. அதிலிருந்து மானிடசந்ததியைக் காப்பாற்றக்கூடியசாதனமாகச் செபமாலையை அவர் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார். "ஓ, என் யேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை நரகநெருப்பில் நின்றும்இரட்சித்தருளும். சகல ஆத்துமாக்களையும் பரலோக பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் அதிகமாகவேண்டியவர்களுக்கு விசேஷ உதவி செய்தருளும்" என்னும்செபத்தையும் செபமாலையின் ஒவ்வொரு பத்துமணிச் செபத்துக்குப்பின்னும் செபிக்கும்படியும் பாத்திமாவில் தேவஅன்னை கற்பித்திருக்கிறார்.

கிறீஸ்தவ குடும்பத்துக்குத் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொடுக்கச்சிறந்தவழி, தகப்பன், தாய், பிள்ளைகள்யாவரும் ஒருமித்து நாள்தோறும் செபமாலை செபிப்பதே.

ஏன் குடும்ப செபமாலை செபிக்கவேண்டும்?

1. "எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் என் நாமத்தால் கூடியிருக்கிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன்" என யேசு வாக்களித்திருக்கிறார். குடும்பத்தினர் செபமாலை செபிப்பதற்காக ஒன்றிக்கும்போது கடவுள்பேரால கூடுகிறார்கள். கடவுளைத் தங்கள்மத்தியில் கொண்டுவருகிறார்கள்.

2. குடும்பசெபமாலை செபிக்க அவர்கள் கூடுகையில், உலக தாய், தகப்பன், மகன், மகள் இவர்களைப்போல அவர்கள் ஒருமிப்பதில்லை; ஆனல், கடவுளுடையமக்களாக, கடவுளைத் தகப்பனகவும், மாசற்ற மரியாயை மாதாவாகவும்கொண்டு தேவ குடும்பத்தின் அங்கத்தினராக ஒன்றிகின்றார்கள்.

3. குடும்ப செபமாலையானது பெற்றோரையும், பிள்ளைகளையும் ஒருமனப்படுத்துகிறது. தற்கால உலகப்போக்கினல் பல வீனப்படுத்தப்பட்டிருக்கும் குடும்பத்தை அதுகுணப்படுத்துகிறது. குடும்பத்தினர் வெவ்வேறுஇடங்களில் அலுவல்கள் செய்கின்றனர். சுயநலம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. குடும்ப செபமாலை அவர்களை ஒவ்வொரு நாளும் சிலநிமிஷமாவது ஒற்றுமைப்படுத்திக் கடவுளையும், அவரது திருமாதாவையும் நோக்கி அவர்கள் நேசத்துடன் செபிக்கும்படி செய்கிறது.

4. இன்றையஉலகில் தாண்டவமாடும் நாஸ்திகபோக்குக்குக் குடும்ப செபமாலை நல்லஓர் மருந்து. மற்றெந்தக்காலத்தையும்விட இந்தக்காலத்தில் குடும்ப வாழ்க்கையைப் பாதுகாக்கக்கூடிய ஒரு பலமுள்ள ஆயுதம்தேவை. கிறீஸ்துவ வாழ்க்கையின் சென்மசத்துருக்களான உலகப்போக்கும், உலகக்கொள்கைகளும் முதலில் குடும்பத்தையேபாதிக்கின்றன. பத்திரிகைகளும், புத்தகங்களும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## மூவர் ஆலோசனை மகாநாடு

ஸ்ராலின் இறந்தார். அவருக்குப்பின் ருஷியாவின் 'மனமாற்றம்' பற்றிப் பேசாத மேடையிலலை, புத்தகமில்லை, பத்திரிகையில்லை. உண்மையாகவே ருஷியாவின் மனமாற்றம், மேற்கு ஜேர்மனியின் மறுமலர்ச்சி, டல்லஸின் உலகசுற்றுப் பிரயாணம் ஆதியனபற்றிய சம்பவங்கள் வருமாறு:

மரணத்திரையுள் ஸ்ராலின் மறைந்ததுமுதல் உலகசமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான ஊக்கம் அதிகரித்துள்ளது. ருஷியாவை ஆளும்கோஷ்டியில் நேர்ந்த மாறுதலான மனப்பான்மையும் மாற்றத்துக்கு வழிசெய்துள்ளது என்று சிலர் நம்புகின்றனர். ஸ்ராலின் போர்ப்பிரியர்; சாம்பிராச்சிய வெறியர்; கைகலவாப்போரின் காரணகர்த்தர்; இவரது மறைவுக்குப்பின் ருஷியாவில் இப்பொழுது பதவி வகிப்பவர்கள் அனுபவவாதிகள்; இராணுவத் தலைவர்கள். எனவே, உலக மாறுதலைக்கருதி ருஷியாவின் போக்கை மாற்றவேண்டுமென உணருகின்றனர் என்றெல்லாம் இவர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, அமெரிக்க எழுத்தாளர் லிப்மன் அவர்களின் கருத்து இதுவாகும்.

கைகலவாப்போர் நீடித்துக் கொண்டே போகக்கூடியதொன்றல்ல. மேற்கும் கிழக்குமாக நிகழக்கூடிய வர்த்தகத்தை இது குறுக்கிட்டுத் தடைசெய்கிறது. மேற்குஐரோப்பிய நாடுகளுக்குக்கிடைக்கும் அமெரிக்கஉதவியைப்பார்த்து இரும்புத்திரை நாடுகள் பொறாமையும், ருஷியா மீது பெருவெறுப்பையும் அடைந்திருப்பது இயற்கை. முக்கியமாகச் சென்ற ஈராண்டுகளின் பெருஞ்சாதனை, மேற்கு ஜேர்மனியின் மறுமலர்ச்சியே. வடஅத்திலாந்திக் சாசனம், ஐரோப்பிய பாதுகாப்புச் சமுதாயம் ஆதியஇரண்டும் எவ்வாறாயினும் இன்று மேற்குஜேர்மனி துயில்நீத்தாற்போல வீறுகொண்டெழுந்துள்ளது. ஸ்ராலின் உயிர்நீத்ததைவிட இதுவே ஐரோப்பிய நிலையில் ஏற்பட்டுள்ள பெரியமாறுதலாகும். மேற்கு ஜேர்மனியே மேற்கு ஐரோப்பாவின் இருதயம். நோய்வாய்ப்பட்டிருந்த இவ்விருதயம் இன்று நோய்தீர்ந்துசெவ்வனே பணியாற்றுகிறது.

இதை முற்றும் உணர்ந்தார் திரு சேர்ச்சில் அவர்கள். உலக அரசியல்வாதிகளில் அனுபவத்திலும், அறிவிலும் ஒருங்கேதலைசிறந்து விளங்குபவர் இவரே. ஆயுத உற்பதியாலே பிரித்தானியநாடு இடுப்பொடிந்திருக்கிறது. பிரான்சோ நிலையான அரசசங்கமின்றி நெடுநாள் தடுமாறியது. ஏழாண்டுகளிலே பதினெட்டு மந்திரிசபைகளை விழுங்கியும் இன்னும் பசிதீரவில்லை, பிரான்சிய சட்டசபைக்கு. பத்தொன்பதாவது மந்திரிசபை இப்போதே பிறந்துள்ளது. இந்தோசீனப்போர் காட்டுத்தீபோல இங்குமங்கும் மூண்டுகொண்டு பிரான்சின் படைப்பலத்தையும், பொருளாதாரவளத்தையும் குறைத்துக் கொண்டேபோகிறது. பிரித்தானியர்களும் கவலையில்லாது போகவில்லை. முக்கியமாகச் சுவேஸ்கால்வாய் ஒரு பெருங்

— T. சீனிவாசன் —

கவலை. சூடானியப்பிரச்சினைக்கு ஓர் கண்ணியமானமுடிவு வந்ததுபோலச் சுவேஸ்கால்வாய்ப் பிரச்சினையையும் சிக்கறுத்துவிடலாமென்று சேர். சேர்ச்சில் நினைத்தது பலிக்கவில்லை.

ஆகவே, அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. டல்லஸ் பூமியை வலம்வருவதென முடிவு செய்தார். மேற்கு ஐரோப்பிய தலைவர்களைக் கண்டுபேசி ஐரோப்பிய பாதுகாப்புச் சமுதாயத்தை வலுப்படுத்த முயன்றார். பின்னர் மத்திய கீழ்த்திசைநாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அளவளாவினர். இறுதியில் இந்தியா, பாகிஸ்தான் இந்நாடுகளையும் பார்வையிட்டுத் திரும்பினர். திரும்பியவர், உலகமெங்ஙனும் அமெரிக்கருக்கு உள்ள நன்மதிப்பையும், ஓரளவு நிலவும் சந்தேகங்களையும் தாம் கண்டுணர்ந்திருப்பதாகக் காட்டியுள்ளார். ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட ஆபத்து இன்னும் விலகவில்லை; குறையவுமில்லை; அமெரிக்கர் உலகஆதிக்கத்தைநாடுகின்றனர். அன்றியும், பழைய ஆதிக்கங்களுக்குப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சுதேச வர்த்தமானம்

### சேபமாலைத்தாசர் ஆச்சிரமம்

கிராமஅபிவிர்த்திச் சங்கங்களின் தலைவர்களான அறுபதுபேர் சமீபத்திலே தோலகட்டிச் செபமாலைத்தாசர்களான சந்நியாசகர்கள் பதின்மர் அச்சுவேலியிலே சுமார் இருபதுஏக்கர் நிலத்தை உழுதுபண்படுத்திப் பயிர்செய்வதைப் பார்வையிட்டுத் திரும்பினுர்கள். இவர்களில் அனைவருக்கு மேற்பட்ட தலைமைக்காரரும் அடங்கியிருந்தார்கள். மிகவும் அரிதாகவேலைநுவரோ ஒருவர் சம்பாஷிக்கும் வழக்கமுடைய இந்தச்சந்நியாசர்கள் தம்முள் நியமித்தவொருவர் அவர்களை அழைத்துச்சென்று அங்குநடைபெறுவதுவரும் நானாவித கமத்திட்டங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவைகள் ஒவ்வொன்றும் அவர்களுக்குஒவ்வோர் காட்சிப்பகுதியாகவே இருந்தன. எருதுகளைக்கொண்டு இயக்கப்படும் வாளியந்திரமுறையால், அதாவது "சூத்திரக்கிணறு"றுல் ஒருவர் தண்ணீர் இறைக்க, ஏனையோர் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சினர். வேலை ஒழுங்குமுறைப்படி உற்சாகமாக நடைபெற்றது. இரு சந்நியாசர்கள் உற்பத்தியான மரவள்ளிக்கிழங்குகளை கிண்டி எடுத்துக்கொண்டிருந்தனர். மற்றொருவர் கிருமிநாசனிகளைப் பிரயோகித்து உணவுப்பயிர்களிலிருந்து நோய்க்கிருமிகளை அகற்றிக்கொண்டிருந்தனர். ஆறுபோல்வரையில் தங்கள் மேசைகளின் அருகிலுட்கார்ந்து மெழுகுவர்த்திகள் செய்வதற்காகத் திரிகளைச் சித்தஞ்செய்துகொண்டிருந்தனர். தோட்டத்தின் மத்தியில் சந்நியாசமடம் இருப்பதையும், இருசந்நியாசர்கள் ஏககாலத்தில் செபஞ்செய்வதையும், 24 மணிநேரமும் சந்நியாசர்கள் மாறிமாறிச் செபஞ்செய்து இவ்விதம் நாள்முழுவதும் செபம் நடைபெறுவதையும் அவர்கள் கவனித்தனர். கடைசியாக இந்தச் சந்நியாசர்கள் தங்கள் தோட்டத்தில் உண்டுபண்ணிய திராட்சச் செடிகளிலிருந்து வடித்த திராட்சைரசம் கொண்டு அவர்களை உபசரித்தார்கள்.

### மற்றும் இருமனுக்கள்

பட்டிருப்புப்பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துக்குத் தெரியப்பெற்றிருந்த திரு. எஸ். எம். இராசமாணிக்கம்அவர்களின் தேர்தலைஆட்சேபித்து அதனைத் தள்ளிவைக்குமாறு திரு. ஏ. கனகரத்தினம்என்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனுவானது சங். எச். ஏ. டி. சில்வாநீதியரசரால் விசாரணைசெய்யப்பெற்று 7,500 ரூபா செலவுபணத்துடன்சென்ற புதன்கிழமை தள்ளப்படலாயிற்று. இந்தமனுவிசாரணை பதின்மூன்று தினங்களாக நடைபெறலாயிற்று. பட்டிருப்புத்தேர்தலிலே திரு. எஸ். எம். இராசமாணிக்கம், திரு. எஸ். யு. எதிர்மனசிங்கம், திரு. கே. அருளம்பலம் எனும்மூவரும் போட்டியிட்டார்கள்.

பொத்துவில்பிரதிநிதியாகத் தெரியப்பெற்றிருந்த திரு. எம். எம். இபிறுஹிம்என்பவரின் தேர்தலைஆட்சேபித்துத் திரு. பி. எம். எம். பாவாபொடி என்பார் சமர்ப்பித்தமனுவும் சங். டி. சில்வாநீதியரசரால் விசாரணைசெய்து 1,250 ரூபாசெலவுபணத்துடன்சென்ற திங்கட்கிழமை தள்ளப்படலாயிற்று. இதிலே மனுசமர்ப்பித்தவர் தான் பாரித்த குற்றச்சாட்டுகளை அத்தாட்சிப்படுத்த இயலாதவராயினர்.

### அதிகமான மிளகாய்

இலங்கையிலே செய்கை பண்ணப்பட்ட ஐஞ்நூறு தொன் மிளகாய் அடுத்தசில மாதங்களில் விற்பனைக்கு வருமென்று உணவுஅதிகாரிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள். மிளகாய் செய்கை பண்ணப்படுகின்ற யாழ்ப்பாணம், வவுனியா, திரிகோணமலைப் பிரிவுகளிலே மிளகாய்பறிக்குங் காலம் இப்போதே ஆரம்பமாகியுள்ளது. இதற்குமுன் சென்ற வருடத்தில்தான் மிகப்பெருந்தொகையான ஊர்மிளகாய் — அதாவது 200 தொன்மிளகாய் இலங்கையில் செய்கைபண்ணப் படலாயிற்று. யாழ்ப்பாணத்திலே இடைக்காட்டில் மாத்திரம் 100 தொன்மிளகாய் விளைந்திருக்கின்றது. இவ்வளவு பெருந்தொகையான மிளகாய் இலங்கையிலுள்ள வேறெந்தக் கிராமத்திலும் இதற்குமுன் விளைந்ததே கிடையாது. மிளகாய்அதிகமாக விளைந்திருப்பதையிட்டு முன்னர் பிறநாடுகளிலிருந்து மிளகாய்இறக்குமதிசெய்யும் வியாபாரிகள் இறக்குமதிசெய்யும் ஒவ்வோர் 50 தொன்னுக்கும் ஒருதொன் ஊர்மிளகாய் வாங்கியே தீரவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்ததற்குப்பதில் இப்போது ஒவ்வோர் 20 தொன்னுக்கும் ஒருதொன்ஊர்மிளகாய் வாங்கவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது.

### கிணற்றில் கண்ட பிரேதம்

பனைவாசியான 33 வயதுடைய வைரமுத்து பொன்னையா என்பவர் சென்ற ஆனிமாதம் 18-ந்திகதி முதல் தனது வீட்டிலிருந்து காணுமற்போயினா. பலவிடங்களிற் போய்த்தேடியும் ஆள்காணப்படவில்லை. கடைசியாக அவர்பிரேதம் பாவனையற்றிருந்த ஓர் பாழ்ங்கிணற்றிலே மிகமோசமாகஅழுகியநிலைமையில் மிதக்கக் கண்டறியப் படலாயிற்று. சாக்குகளால்சுற்றிக்கட்டப்பட்டிருந்த அப்பிரேதத்தில் காயங்கள்பலஇருந்தனவாம்.

### சதாசிவம் கொலைவழக்கு

இலங்கையிலே கிறிக்கெற் பந்தாட்டத்தில் பேர்பெற்றவரான திரு. மகேந்திரா சதாசிவம்என்பவர் தனதுமனைவியாரான ஆனந்தத்தைக் கொலைசெய்தாரெனத் தொடரப்பட்டவழக்கானது கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே சங். கிறேஷியன் நீதியரசரால் 58 தினங்களாக விசாரணைசெய்யப் பெற்றுக் கடைசியாகச் சென்றவியாழக்கிழமை தள்ளப்படலாயிற்று. இந்தக் கொலை 1951-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ந் திகதி நடைபெறலாயிற்று. அன்று தினமே அவள்கணவரான சதாசிவம் கைதுசெய்யப்பட்டார். அவர் வீட்டு வேலைகாரனை வில்லியம் என்பவன் இக்கொலையில்உடைந்தையானவனுகக் கொள்ளப்பட்டு அவ்வாண்டு ஐப்பசி மாதம் 18-ந் திகதி கைதுசெய்யப்பட்டான். கீழ்க்கோட்டிலே இவ்வழக்கு விசாரணை 77 தினங்களாக நடைபெற்றது. சுப்பிறீங்கோட்டு விசாரணையின்போது வழக்காளிபக்கமாக 48 சாட்சிகளும், எதிரிபக்கமாகப் 11 சாட்சிகளும் விசாரணை செய்யப்பட்டார்கள். சுப்பிறீங்கோட்டிலே இந்த விசாரணை பற்றிய விபரம் 3,100 பக்கங்களில் ரைப் அடிக்கப் படலாயிற்று. கீழ்க்கோட்டுவிசாரணைபற்றியவிபரம் 3,200 பக்கங்களில் கையெழுத்தாக எழுதப் படலாயிற்று. திரு. சதாசிவம் இருபது மாதகாலம் விளக்கமறியலில் இருந்துவரலானுர். வில்லிம் விளக்கமறியலில் இருக்கும்போது அரசாங்கத்தால் மன்னிப்பு அருளப்பட்டு முடிக்குரியமுதற் சாட்சியாக எடுத்துக்கொள்ளப் பட்டான்.

### இரத்தோபகார தொண்டர்கள்

கட்டுக் கம்பளைஎனும் கிராமத்திலிருந்து கல்விசம்பந்தமாய்க் கொழும்பு நகரிலே சுற்றுப்பிரயாணம் செய்துவந்த கிராமத்தொண்டர்கள் 22 பேர் அங்கு தங்கியிருந்தபோது அரசினர் பெரியஆஸ்பத்திரியிலுள்ள இரத்தவங்கிக்குச்சென்று தங்கள் சரீரங்களிலிருந்து தலைக்கு ஒருபைந்து இரத்தமாக 23 பைந்து இரத்தம் உபகரித்து இரத்தோபகாரிகளாகத் திரும்பியிருக்கின்றுர்கள். கட்டுக்கம்பளைப்பகுதிக் கருமாதிகாரியின் ஆலோசனையின்பேரிலேயே அவர்கள் இவ்வாறு செய்தார்கள்.

### புதிய மோட்டர்லோஞ்ச்

வடபகுதியிலே கடல்மார்க்கமாகக் களவிலே நடைபெறும் வியாபாரத்தைக்கண்டுபிடிப்பதற்கும், தடைசெய்வதற்குமாக ரேகுப்பகுதியினர் இதுவரை சுங்ககாவலன்என்ற மோட்டர் லோஞ்சைப் பிரயோகித்து வந்திருக்கின்றனர். ஆனுல், இது அவ்வளவு சிறந்ததுஅல்ல. அதனுல் ஐந்துலட்சம் ரூபாசெலவிலே பிரித்தானியில் நவமாகக் கட்டுவிக்கப்பட்ட "சுங்கமாருதம்" எனும் புதியலோஞ்ச் சென்ற சனிக்கிழமை கொழும்புவந்து சேர்ந்திருக்கிறது. இது 550 குதிரைப்பலவேகமுள்ளது. மணித்தியாலம் 20 கடல்மைல்வீதம் செல்லக்கூடியது.

* * *

— பிரித்தானியஅரசு செய்துள்ள அணுக்குண்டு தென் ஆஸ்திறேலியாவிலே பதிணுயிரம்சதுரமைல் விஸ்தீரணமுடையதாய் எவருமேபிரவேசியாது தடைசெய்யப்பட்டுள்ள ஓர்வனந்தரத்தில்வீசிப் பரிசோதனைசெய்யப்படவிருக்கிறது. முதன்முறையாக நிலத்தில்வீசி நடத்தப்படவிருக்கும் இந்தப் பிரித்தானிய அணுக்குண்டுப்பரிசோதனையில் பிரித்தானிய — ஆஸ்திறேலிய அரசாங்கங்கள்இரண்டும் ஒத்துழைக்கவிருக்கின்றன.

# அது ஏன் அம்மா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

புதியகுரவர் எல்லோரையும் பிரிந்து செல்லவேண்டியநேரம் அண்மியது. உள்ளபடியே பெரும் பாக்கியமானநேரம் அது. தேவனின் குரலொலியைப் பின்பற்றிச்செல்லச் சிறிதுமே தயங்காத புதியகுரவர் தாய்முன்சென்று விடைபெற்றுர். அவள்பாதங்களிலே முழந்தாட்படியிட்டிருக்க, அவளும் வழக்கம்போல அவர்சிரசில் சிலுவையடையாள மிட்டாள். புதல்வனது மார்பிற் தொங்கிய மிஷனரிமாருக்குரிய குருசைக் கடைசிமுறையாகக் குனிந்து முத்தமிட்டு: "மகனே! தேவன் உன்னைக் காப்பாற்றுவார்; உனக்காக முன்னிலும் அதிகமாய் மன்றுடிவருவேன்; எனது ஆன்மா உன்னைத் தொடர்ந்து கொண்டிருக்கும்; இதுஉண்மை" எனக்கூறினுள். அவர் அன்னையின் அனுமதிபெற்றதும் அங்கு சமுகமாயிருந்த அனைவர்க்கும் தமது திருக்கராசி அருளினுர். கடைசியாகச் சீனுவுக்குப் புறப்படலானுர். அவர் தமது அன்னையைக் காணபது இதுதான் சிலவேளைகடைசிமுறையாகுமோ? அவர் தாய்நாடு திரும்பிவருவாரோ என்பதைத் தீர்க்கமாய்ச்சொல்ல எவரால் முடியும்? பிறர் ஆன்மஇரட்சணியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு, கெட்டழிந்துபோகின்ற கோடிக்கணக்கான ஆன்மாக்கள் நித்திய சீவியத்தைப்பெற வழிபண்ணவேண்டுமென்ற ஆத்தும ஈடேற்ற வாஞ்சையினுல் தூண்டப்பெற்றே அவர் இப்படித்தூரதேசஞ் செல்லமனங்கொண்டார்.

அவர் சீனதேசம்போய்ச் சேர்ந்தபின் அங்கிருந்து வீட்டுக்குக் கடிதங்கள் எழுதிவருவார். மிஷனரியதொண்டின் இன்பதுன்பங்களைப் பற்றியெல்லாம் தமதுதாயாருக்கு அவர்எழுதினுரெனினும், தாம்அனுபவிக்கும் கஷ்டங்களையோ அவர்அதிகமாக அறிவிக்கவில்லை. எனினும் கடிதங்களைக் கவனமாகப்படிக்கும் தாய்க்கு மகன் அனுபவிக்கும் கஷ்டங்களையெல்லாம் கண்டுபிடிப்பது இலகுவாயிருந்தது. அவர்எழுதிய எழுத்துக்களுக்கிடையே அவர் அனுபவிக்கும் கஷ்டங்கள் எத்தகைய கடுமையானவைஎன்பது புலனுயிற்று. உண்மையிலே அவர்பெரிதும் உபாதைப்பட்டார். அவ்வேளைகளிலெல்லாம் தமது குடிசையின்மேற் தொங்கிய சிலுவையை அண்ணுந்து பார்த்துத் திவ்வியஇரட்சகர் ஜெத்சமனியதோட்டத்தில் பட்டவேதனைகளுடன் தமதுஉபாதைகளையும் ஒன்றுசேர்த்து ஒப்புக்கொடுப்பார். திருச்சிலுவையே அவருக்கு எப்போதும் ஆறுதல் தந்தது. அன்றியும் அவர் தாயார் கூறிய இறுதிவார்த்தைகள் அவருக்குப்பெரிதும் உற்சாகம்அளித்தன. அவற்றை நினைவுகூர்ந்து அடிக்கடி தம்முள் மனப்பாடமாக அவற்றைச் சொல்லியுங்கொள்ளுவார்: "மகனே, உனக்காக முன்னிலுமதிகமாய் மன்றுடிவருவேன்." அவர்தாயாரின்கடிதங்களும் அவருக்கு ஒழுங்காக வந்துகொண்டிருந்தன. அவளுடைய எழுத்துகளைப் பார்த்துவிட்டு அவர் அளைகடந்த ஆனந்தம் கொள்ளுவார். இவ்விதம் பலஆண்டுகள் ஓடிக்கழிந்தன.

யுத்தம் தொடங்கியது. பொதுவுடைமைக்கட்சியினர் சீனுவை அடிப்படுத்திக்கொண்டனர். அவர்கள்செய்த அட்டூழியங்கள் தேசம்எங்கும்பரந்து பயப்பிராந்தியை உண்டுபண்ணின. அத்துடன் பஞ்சமும் தலைகாட்டியது. கஷ்டநஷ்டங்கள் எங்கும் அதிகரித்தன. தமது சுயதேசமும் பஞ்சம்படையினுற் பாதிக்கப்பட்டிருப்பதையும் சுவாமியார் அறிந்தார். தமது அருமைச்சகோதரர் இருவர் யுத்தத்தில் மடிந்த துயரசெய்தியையுங் கேள்வியுற்று ஆற்றொணுத்துன்புற்றுர். யுத்தமுனைக்குச்சென்ற தமது சகோதரர் திரும்பி வீடுவாராததையிட்டு அவர் தாயார் எழுதியது வியக்கத்தக்கது. "தேவன் அனுப்புகிறவைகள் அனைத்தையும் சந்தோஷத்துடன் ஏற்க நான் ஆயத்தமாயிருக்கிறேன்; மகனே! அவர் என்றும் உன்னைஆசீர்வதிப்பாராக."

ஆசிரியர்
**V. P. மரியாம்பிள்ளை**

தாய் ஒருமுறை தனதுபோட்டோப் படம்ஒன்றை மகனுக்கு அனுப்பியிருந்தாள். அதைக் கண்டதும் தாய்மிகவும்வயதாளியாக இருப்பதை அவதானித்துச் சுவாமியார் ஆச்சரியப்பட்டார். என்றும் நினைவுகூரத்தக்க தாய்த் தமதுநாளாந்த செபப்புத்தகத்தினுள் அப்படத்தைப் பக்குவமாய் வைத்துவிட்டுப் பின்வரும் கடிதத்தை அவளுக்கு எழுதினுர்:

எனது அருமைத்தாயாரே!

தாங்கள் எனக்காகச் செய்துவரும் செபங்களுக்காக நான் மிகவும் நன்றியறிதல் உடையவனு யிருக்கின்றேன். தங்கள்செபங்களில் நம்பிக்கைஎனக்கு அதிகமுண்டு. ஏனெனில், அவற்றின் காத்திரத்தை எனது சீவியகாலத்தில் படிப்படியாக நான் அறிந்திருக்கின்றேன். எனதுவாழ்வு அவற்றினுலேயே பலனுடையதாயிற்றென்ற உண்மையைத் தேவன் நன்கறிவார். மீண்டும் தங்களுக்கு நன்றிகூறி முடிக்கின்றேன்."

அன்புள்ள மகன்
யோண்

இவ்வாறு எழுதிவிட்டுத் தமதுமிஷனரிய குருசைக் கையிலெடுத்து ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள தன்தாயாருக்கு ஆசிஅருளினுர்.

சுபம்!

# கத்தோலிக்க சமாச்சாரம்

### வத்திக்கான் சமாச்சாரம்

அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளுக்கு முந்தியதினமாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 12-ம் பத்திநாத பாப்பரசர் வத்திக்கான் குருசிரேஷ்டர்களும், தமது மெய்காப்பாளரும் புடைசூழ்ந்துநிற்க, அர்ச். இராயப்பரின் கல்லறையில் செபஞ்செய்தாரெனச் சென்ற 28-ந் திகதி வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் எட்டியுள்ளது. முந்தஅன்று தினம் பாப்பரசர் இத்தாலியரும், பிறசாதியினருமான பதினாயிரம் யாத்திரிகர்களுக்குச் சொற்பொழிவுநிகழ்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்; இவர்களெல்லாம் அம்மகாலயத்துள் பிரவேசிக்கும்போது, அர்ச். இராயப்பரது மீன்பிடிகாரர்வலையின் ஓர் சின்னமாக அம்மகாலயவாயிலிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த வாடாப்பச்சைநிறமான பெரிய வலையின்கீழாகச் சென்றார்கள்; கலிலேயாநாட்டைச்சேர்ந்த ஓர் மீன்பிடிகாரரான இராயப்பர் நீரோ சக்கரவர்த்தியின் சேர்கஸ்காட்சிச்சாலையிலே தலைகீழாகச் சிலுவையில் அறையுண்டு வேதசாட்சியானார்; இந்தக்காட்சிச்சாலையின் ஒருபகுதி தற்போது வத்திக்கானில் அடங்கியிருக்கிறது; சிசிலியாவிலே தார்சுஸ்நகரில் கூடாரஞ்செய்பவரான சின்னப்பர் கி. பி. 64-ம் ஆண்டுநடந்த அதேவேதகலாபனையின்போது றோமைநகருக்குத் தெற்கேயுள்ள ஒஸ்தியன்வேஎனுமிடத்தில் கி. பி. 64, அல்லது 67-ம் ஆண்டு சிரச்சேதஞ்செய்யப்பெற்று வேதசாட்சியானர் என்பனவாகக் குறித்த தந்திச் சமாச்சாரம் தெரிவிக்கின்றது

### கண்ணீர் மாத்திரமல்ல

போலாந்திலே இம்முறை திவ்வியநற்கருணைத் திருநாள் கொண்டாடப்பட்டபோது, அந்நாட்டின் திருச்சபைஅதிபரான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் போலிஷ் கத்தோலிக்க மக்களை விளித்து: "உங்கள் கண்களிலிருந்து கண்ணீர்கள் சுரந்து பெருகுகின்றன; ஆனல், உங்கள் கண்ணீரை மாத்திரமல்ல, உங்களுடைய இரத்தத்தையுமே நாம் கேட்கவேண்டியதாய் வரலாம்" எனக் கூறினின்றார். மேலும் அவர் பேசியபோது: "விருத்தியாகும்" நாடுகளென்று சொல்லப்படுகிற இந்தக் கம்யூனிஸ்த ஆட்சி நாடுகளிலே திருச்சபையின் நிலைமை மிகமோசமானது; சிறைச்சாலைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும் இருந்து வருகின்ற கிறீஸ்தவர்களை மேற்றிராணிமார்சந்தியாது விலக்கப்பட்டிருக்கும்போது— மக்களை அடித்துக் கொடிய வேதனைசெய்து வருத்திக்கொண்டு வரும்போது எவருமே விருத்தியைப்பற்றிப் பேச முடியுமா? ஆனல், சரீரத்துக்குப் பலாத்காரஞ்செய்வது ஆத்துமத்தைத் திருப்பமாட்டாது; பலாத்காரமுறையையும், அடக்குமுறையையும் பிரயோகிப்பது எப்போதுமே தோல்வியையொப்புக்கொள்வதற்குச் சரியாகும்" என்றும் கூறலாயினர்.

### பிரபலஅதிமேற்றிராணியார்

இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகரின் பிரபல அதிமேற்றிராணியாராக விளங்கியிருந்தவரான மகாமேன்மைதங்கிய றிச்சேட் டவுணி, டி. டி., பிஎச். டி., எல்எல். டி. ஆண்டவர் ஐம்பது தினங்களாக நோய்கண்டிருந்து தமது 72-ம் வயதிலே சென்ற ஆனி 16-ந்திகதி காலஞ்செல்லலாயினர். இவர் உலகம்அறிந்த பெருங்கல்விமான். ஆஸ்திறேலியதேச மெல்போண் நகரில் நடந்தேறிய தேசியநூற்றாண்டு விழாச் சற்பிரசாதமகாநாட்டுக்குச் சமூகமளிக்கச் செல்லும்வழியிலே இவர் 1934-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 20-ந்திகதி கொழும்பு கண்டுபோனபோது, இவரைத் தரிசித்துப் பொஞ்ஜீன் மண்டபத்திலே இவரது மிகச்சிறந்த சொற்பொழிவொன்றைக் கேட்கும்அதிர்ஷ்டம் இலங்கைமக்களுக்குக் கிடைக்கலாயிற்று. இன்னும் இரண்டுமாதங்களுள் இவர் தமதுமேற்றிராணித்துவ வெண்பொன்யூபிலி விழாவைக் கண்டுகளிக்கவிருந்தார். அதனைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டுவந்தன. குருமார்தொகையிலும், விசுவாசிகளின் தொகையிலும், மற்றும்பலகாரியங்களிலும் தலைசிறந்துவிளங்கும் லிவர்ப்பூல் அதிமேற்றிராசனத்தின் எதிர்காலஅபிவிர்த்தியைத்தூரநோக்கால் அவதானித்தஇவர் அங்கு றோமாபுரி சம்பேதுருவானவர் மகாலயத்துக்குப்பின் உலகில் மகாப்பிரமாண்டமானதாய்க் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த கிறீஸ்துஇராசாவின் ஆலயமானது இவரது அழியாப்பெயரை நிலைநாட்டும் ஓர் அரியசின்னமாய் விளங்குவதாகும்.

### கம்யூனிஸ்த ஆகாயவிமானி

முன்னர் ஓர்சோவியற்ஆகாய விமானியாயிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டவரும், தற்போதுஓர்குருவாய் இருந்துவருகிறவருமான வண. பேவெல் பிளிங்னெற்சோய் சுவாமியார் நியூஜேர்ஸியைச் சேர்ந்த பிளெய்ன்வீல்ட் எனுமிடத்தில் இம்மாசம் 12-ந் திகதிமுதல் மூத்தினங்களாக நடைபெறவிருக்கும் பாத்திமாமகாநாட்டிற்குச் செல்லவிருக்கின்றார். அமெரிக்க ஐக்கியதேசம் முழுவதிலுமுள்ள நீலச்சேனை இயக்கத்தவர்களின் இந்தமூன்றுநாள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இவர் போர்த்துக்காலிலிருந்து அங்கு விமானமூலஞ்செல்வார். "ரூஷியா மனந்திருப்பப்படும்" என்பதே மகாநாட்டில் ஆராயப்படும்விஷயமாகும். ரூஷியாவிலிருந்துதப்பியோடியபின் இவர் றோமாபுரியிலுள்ள பாப்பரசரின் ரூஷியகுருமடத்தில் படித்தார். பாத்திமா பதியிலுள்ள நீலச்சேனைத் தலைமைஸ்தானத்தின் விசாரணைக்குரவராக நியமனஞ்செய்யப் பெற்றிருப்பவர் இவரே.

# கத்தோலிக்க சமயமும் கம்யூனிஸமும்

கம்யூனிஸத்திற்கு எதன்மேலாவது அதிகபகை என்றால், அது கத்தோலிக்க சமயத்தின் மேல்தான். இந்தப்பகை திருச்சபைக்குப் பெரும்புகழ்ச்சியானதே. திருச்சபை அதேபோலக் கம்யூனிஸத்தை வெறுக்கிறதா? திருச்சபைக்குக் கம்யூனிஸத்தின்மேல் வெறுப்பு உண்டு. ஆனல், அதை விளக்கிக்காட்டவேண்டும். திருச்சபை கம்யூனிஸத்தை வெறுத்தால் அந்த வெறுப்புக்குக் காரணம்?

கம்யூனிஸம் முதலாளித்துவத்தை வெறுப்பதாலே திருச்சபை கம்யூனிஸத்தை வெறுக்கிறதா? பல கம்யூனிஸ்தர்கள் தெரிந்தோ தெரியாமலோ, தந்திரமாகவோ வஞ்சகமாகவோ பின்வருவதைக் காரணமாகக் கூறுகிறார்கள். கத்தோலிக்க திருச்சபை முதலாளிகளின் கூட்டாளி; அதனல்தான் கம்யூனிஸத்தை வெறுக்கிறது என்பர். இதில் உண்மை இல்லை. முதலாளித்துவம் என்றால் என்ன? ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் கொஞ்சம் நிலபுலம் வைத்திருத்தலோ, உற்பத்திக்குக்காரணமான பொருட்களின் மேல்சிறிதுபாத்தியதை கொண்டாடுவதோ, தனிஉரிமை செலுத்துவதோ முதலாளித்துவம் ஆகாது. முதலாளித்துவம் எனில்: நாட்டிலுள்ள நிலமோ புலமோ, பணமோ சொத்தோ, கோடிக்கணக்கில் இலாபந்தரும் பெரிய தொழில் ஆலைகளோ, ஓர் நாட்டிலே சிலர் கையிலிருந்து, அதனல் ஆடு மாடுகளை உழைப்புக்கு வாங்குவதோ, வாடகைக்கு அமர்த்துவதோ போல் பகுத்தறிவும், சுதந்தரமுமுள்ள மனிதப்பிறவிகளை உழைப்புக்குத் திட்டஞ்செய்தலே முதலாளித்துவம் என்க.

இந்த முதலாளித்துவத்தைத் திருச்சபைகண்டிக்கிறது, ஏனெனில், அந்தநாட்டின் செல்வத்தையெல்லாம் அள்ளிச் சிலதனிகர்பையில்அது திணிக்கிறது. கம்யூனிஸமோ நாட்டிலுள்ள செல்வத்தையெல்லாம் சூறையாடிக் கம்யூனிஸ்த அரசியல் மடியில் கொட்டுகிறது. அதனல் சாதாரணமக்கள் அங்கும் அடிமைகளே. இங்கும் அடிமைகளே. எல்லாம் சமூகத்தின் உபயோகத்திற்கு; தனிப்பட்ட ஆளுக்கு உரிமை ஒன்றும்இல்லை என்கிறது கம்யூனிஸம். எல்லாம் தனிப்பட்ட ஆளுக்குத்தான்; சமூக உபயோகத்திற்கு ஒன்றுமில்லை என்பது முதலாளித்துவம். இரண்டும் தப்பிதமே என்று திருச்சபை கண்டிக்கிறது. பொதுநன்மைக்குப் பாதகமில்லாது தனிப்பட்ட உரிமை; தனிப்பட்ட ஆட்கள் வழியாகப் பொதுநன்மை என்று சொல்லுகிறது திருச்சபை.

"திருச்சபைக்குப் புத்துலகம் பிடிக்காது; பழையகறுப்பனே கறுப்பன்என்ற கொள்கை; முன்னேற்றம்கூடாது; நூதன முன்னேற்றத்தைக் கண்டால் அதற்குப்பயம்" என்றெல்லாம் வேறுபலர்சொல்லி, அதனல்தான் கம்யூனிஸம் அதற்குப் பிடிக்கவில்லை என்பர். சினிமா, வானொலி இவைகளையெல்லாம் கண்டுபிடித்தவர்கள் கத்தோலிக்கர். திருச்சபை இவர்களை ஊக்கித்துவந்தது என்பதை இவர்கள் அறியார்களா? கம்யூனிஸம் கண்டிக்கிற பலகாரியங்களைத் திருச்சபையும் கண்டிக்கிறது. அந்தத் தீமைகளைப் போக்கக் கம்யூனிஸம் உபயோகிக்கும் வழிவகைகள்தான் ஏற்றுக்கொள்ளத் தகாதவைகள். சலதோஷம் பிடிக்கிறது என்று மூக்கைவெட்டி எறியச்சொன்னனும் தென்னலிராமன். இதுபோலத்தான் இருக்கிறது கம்யூனிஸத்தின் சிலவழிவகைகள். முதலாளித்துவத்தைப் 13-ம் சிங்கராயரும், 11-ம் பத்திநாதரும் கண்டித்ததுபோல வேறு எவரும் கண்டித்ததேயில்லை.

"திருச்சபைக்கு ரூஷியாவின் மீது குரோதம்; ஆதலால்தான் அதற்குக் கம்யூனிஸம் பிடிக்க

✻ ஜெயம்ஜீ ✻

வில்லை" என்பர் மற்றுஞ்சிலர். ரூஷியாவின்மேலாவது ரூஷிய மக்கள்மேலாவது வருத்தமில்லை. அங்குவாழும் 20 கோடி ரூஷிய மக்களுள் 60 லட்சம்பேர்தான் கம்யூனிஸ்தகட்சியைச் சேர்ந்தவர்கள். மீதியான 19 கோடியே 40 லட்சம்மக்களும் பிழிந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள்மேல் திருச்சபைக்கும், நல்ல மனிதருக்கும் இரக்கம். ரூஷிய மக்கள் பலநாட்டினரைவிட நல்லவர்கள் என்று சொல்லலாம். கம்யூனிஸத்தைப் போற்றிவரும் அந்த 60 லட்சம் மக்கள்மேலாவது பகையா? அதுவும் கிடையாது. யேசுநாதர் சொல்லிக்கொடுத்த பாடம், "பாவத்தை வெறு, பாவியை நேசி." அதேபோலத் திருச்சபை கம்யூனிஸத்தை வெறுக்கிறது. கம்யூனிஸ்தர்கள்மேல் இரக்கமும், அனுதாபமும். அவர்கள்மனம்மாறுவதுதான் பெரிதேயொழிய மடிவது பெரிதல்ல. திருச்சபை மக்களுக்கு ஓயாமல் கற்றுக்கொடுப்பது இதுதான்: ஓர் ஆளையும் வெறுக்காதே; யாவருக்கும் அன்புகாட்டு; பகைவர்களுக்காகவும் வேண்டிக்கொள் என்பதாம். பாவிகளோ, கம்யூனிஸ்தர்களோ கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்டவர்கள் அல்லவா?

கடவுளுக்கு விரோதமாகச் சோவியற்அரசு செய்யும் பிரசாரத்தைப்பற்றி 1930-ம் ஆண்டு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

புதுமடம், புல்லாவெளி

### அர்ச். செபஸ்தியார் திருநாள்

இத்திருநாள் வழமைபோல வருகிற ஆடிமாதம் 8-ந் திகதி கொண்டாடப்படும்.


## எனது பூசைப் புத்தகம்

வெளிவந்து விட்டது!
மருதமடுத் திருப்பதியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிளேஸ்பேப்பர் ரூபா 5-00
பைபிள்பேப்பர் ரூபா 5-75

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


### திருநாள் அட்டவணை

ஆடிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 3 | அ. 2-ம் சிங்கராயர், பா. | (வெ) |
| சனி | 4 | திருச்சபையின் பாப்புமார் | (சி) |
| ஞா | 5 | இஸ்பிரீத்து ஆகம. பின் 6-ம் ஞாயிறு — அ. அந். மரியா சக்கரியார், கு. | (ப) |
| திங் | 6 | அ. கோவாரப்பர், கு. | (சி) |
| செ | 7 | அ. சிறில், மே. | (வெ) |
| புத | 8 | அ. எலிசபேத்தம்மாள், இ. | (வெ) |
| வி | 9 | அ. அனத்தோலியம்மாள், க. வே. | (ப) |


சத்தியவேத
# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
ஆடி மாதம் 2-ந் திகதி


## குடும்பசெபமாலைத்தினம்

“எங்கள் முழுத்தைரியமுங் கொண்டு, நம்மாலான மட்டும் பிரயாசப்பட்டு நல்லகுடும்பங்களைப் பாதுகாப்பதிலும், பிரிந்து சீரழிந்துபோயிருக்கும் குடும்பங்களைப் பழையஉறுதிப்பாடும், ஒற்றுமையுமுடையவைகளாகத் திருத்தியமைப்பதிலும் முயற்சியாயிருப்போமாக! இந்தநோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நிச்சயமானதும், தற்காலம் அதிகமாகமறந்து கைவிடப்படுவதுமான ஒருவழியாதென்றால், குடும்பத்தவர்கள்சேர்ந்து குடும்பமாகச் செபமாலை செபிப்பதேயாம்” என்று நமது பரிசுத்தபிதாவாகிய 12-ம் பத்திநாத பாப்பரசர் அறைகூவுகின்றார்.

நிற்க, மகாவந். நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் தமது மேற்றிராசனமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க குடும்பங்கள்மத்தியிலே குடும்பசெபமாலைப்பத்தியானது பரந்து சிறந்தோங்கவேண்டும்; அத்தாலே தமதுஞானமக்கள் சகலவித ஆசீர்வாதங்களையும் பெற்று, ஞானவளமுற்றுச் சீராகவாழவேண்டுமென்ற பெருங்காதல் கொண்டவராய் இப்பத்திக்குத் தகுந்ததோர் அஸ்திவாரமிடும் நோக்கமாக யாழ்ப்பாணமேற்றிராசனமுழுவதிலும் இந்த ஆடிமாதம் 5-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை “குடும்பசெபமாலைத்தின” மாகக் கொண்டாடப்படவேண்டுமென ஆசிக்கின்றார். அவர்ஆசிக்கிறபடி, எமது மேற்றிராசனத்திலே நாம் முதன்முறையாக வருகிற ஞாயிற்றுக்கிழமை குடும்பசெபமாலைத் தினத்தைக் கொண்டாடப்போகிறோம். அன்றைய கொண்டாட்டமானது, இம்மேற்றிராசனத்திலுள்ள ஒவ்வோர் கத்தோலிக்ககுடும்பமும் தினமும் தவறாது குடும்பசெபமாலைப்பத்தியை அனுசரித்துவர ஓர் பெருந்தூண்டுகோலாய் இருக்குமென நம்புகின்றோம்.

குடும்பசெபமாலை குடும்பத்தின் தனிஅழகாகும். குடும்பத்தின்மீது தேவனின் ஆசியும், அருளும் மழைபோல இறங்கச் செய்வது குடும்பசெபமாலை. குடும்பத்திலே சமாதானம் ஏற்பட்டுச் சாந்திநிலைபெறவும், சந்தோஷம்பெருகவும் செய்யுஞ் சாதனம் குடும்பசெபமாலை. குடும்பசெபமாலை சொல்வது பழங்காலந்தொட்டு இருந்துவரும் ஓர்நற்பழக்கம். இந்தச் சீரியபழக்கத்தை மேற்கொண்டுள்ள குடும்பங்கள் அடைந்துவரும் அருட்கொடைகளும், அனுகூலங்களும் அனந்தம் என்க.

உலகப்பிரசித்திபெற்ற விஞ்ஞானியாகிய மார்க்கோனிபிரபு ஓர் செபமாலைப்பக்தர். அவர் தமது திருமணத்தன்று குடும்பசமேதராய்ப் 11-ம் பத்திநாத பாப்பானவரைச் சந்திக்கச் சென்றார். இருவருக்கும் சோபனவாழ்த்துக் கூறியதன்மேல் பாப்பானவர் அவர்களுக்கு ஒவ்வோர்செபமாலையைப் பரிசாக வழங்கி, “நீங்கள் இருவரும் ஒன்றுசேர்ந்து தினமும் செபமாலை சொல்லிவாருங்கள்; எப்பொழுதாவது நீங்கள் ஒருவரைவிட்டுஒருவர் தூரப்பிரிந்திருக்க நேரிடும்போது, ஒருவரைஒருவர் நினைத்துச் செபமாலைசொல்லுங்கள்” எனப் புத்திகற்பித்தார். அதன்படியே இருவரும் குடும்பசெபமாலைப் பத்தியைக் கடைப்பிடித்தனர். கடைசியாக மார்க்கோனிபிரபு மரணப்படுக்கையில் இருக்கும்போது இறுதியாகக்கூறியதுயாதெனில், “நான் கடைசிமூச்சு விடுகிறவரையிலே செபமாலை என்கையில் இருந்ததென்று எனது பாரியாருக்கு அறிவித்துவிடுங்கள்” என்பதே.

இன்று குடும்பசெபமாலைப் பத்தியின் அப்போஸ்தலராக விளங்குகின்றார் வண. பற்றிக் பெய்ற்றன்சுவாமியார். குடும்பங்களைக் குடும்பசெபமாலை இயக்கத்தில் சேர்த்துவிடுவதே இவர்கொண்டுள்ளவிரதமாகும். கடந்தபத்துவருடங்களிலும் லட்சக்கணக்கானகுடும்பங்களை இவர் குடும்பசெபமாலை இயக்கத்தில் அணிவகுத்துவிட்டிருக்கின்றார். இவர் போகுமிடமெல்லாம் கத்தோலிக்கர் மாத்திரமல்ல, புரொட்டஸ்தாந்தரும், பாதிரிமார்தானும் அவருடைய போதனையைக்கேட்டுக் குடும்பசெபமாலை இயக்கத்தில் சேர்ந்துகொள்ளுகின்றனர். ஆதலால், நாமும் வரப்போகும் குடும்பசெபமாலைத்தினத்தை இனிதே பயன்படுத்தி அன்று நடைபெறும் கூட்டங்களிலெல்லாம் தினமும் குடும்பசெபமாலை சொல்லிவருவதாக மனோற்சாகத்துடன்வாக்களித்து, குடும்பசெபமாலைஇடாப்பிலே நமது பெயர்களையும் பதிவித்து, இப்பத்தியைப் பிரமாணிக்கமாக அனுசரித்துவருவோமானால், குடும்பங்களைப் பாதுகாப்பதற்கென அது ஓர் பரமசஞ்சீவியாகப் பரலோகத்திலிருந்து பரமஆண்டவனாலே தரப்பட்டுள்ளதென்பதைத் துலாம்பரமாகக் கண்டுகொள்வோமென்பதில் சந்தேகமில்லை.

---

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 6-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மாற். 8: 1—9)

அர்ச். மாற்கு எழுதி வைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே திரளான சனங்கள் கூடிவந் திருக்கையிலே, சாப்பிடுவதற்கு அவர்களிடத்தில் ஒன்றுமில்லா திருந்தபோது யேசுநாதர் தம்முடைய சீஷர்களை அழைத்து அவர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: இந்தச் சனங்களின்மேல் இரக்கமாயிருக்கிறேன். ஏனெனில், இதோ! இவர்கள் மூன்றுநாளாய் என்னிடத்தில்தங்கி, உண்பதற்கு ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைப் பட்டினியாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டால்வழியில் சோர்ந்து போவார்கள். ஏனெனில், இவர்களில் சிலர் தூரத்தி லிருந்து வந்திருக்கிறார்கள் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள் மறுமொழியாக: வனாந்தரமான இவ்விடத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து அவர்களைத் திருப்தியாக்கக் கூடும்? என்றார்கள். மீளவும் அவர்: உங்கள் வசத்தில் எத்தனை அப்பங்கள் உண்டென்று அவர்களைக்கேட்க, அவர்கள்: ஏழு என்றார்கள். அப்பொழுது அவர் சனங்களைத் தரையில்பந்தியமரக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி, அவைகளைப்பிட்டுப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் சனங்களுக்குப் பரிமாறினார்கள். சில சிறு மச்சங்களும் அவர்களிடத்தில் இருந்தன். அவைகளையும் அவர் ஆசீர்வதித்து, பரிமாறக் கட்டளையிட்டார். சனங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மேலும் மீதியான துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

### THE JAFFNA DIOCESAN UNION

An Executive Committee meeting of the Jaffna Diocesan Union will be held on Sunday the 19th July, 1953 at 10 a. m. at the Catholic Club.

AGENDA:

1. To consider:
   "The Amendment to the Rules of the Jaffna Diocesan Provident Society Ltd."

All Members are kindly requested to be present.

A. LAZARUS,
*Secretary.*
The Jaffna Diocesan Union.

* * *

### யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்கம்

யாழ்ப்பாணமேற்றிராசன ஐக்கியசங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டமொன்று 1953-ம் ஆண்டு ஆடி 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணிக்குக் கதலிக்கிளப்பிலே நடந்தேறும்.

நிகழ்ச்சி

யாழ்ப்பாணமேற்றிராசன சேமலாப சங்க பிரமாணங்களைத் திருத்தும் விஷயமாய் ஆலோசிப்பது.

அங்கத்தவர்கள் சகலரும் தவறாது சமுகமளிக்கும்படி தயவாகவேண்டப்படுகின்றார்கள்.

ஏ. லாசறஸ்
காரியதரிசி

கதலிக்கிளப்,
யாழ்ப்பாணம்.
1-7-53

---

குடும்ப செபமாலை

## ஏன் செபிக்கவேண்டும்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கால உலகக்கொள்கைகளை வீட்டுக்குள் கொண்டு வருகின்றன. யாவரும் வாசிக்கும்படி அவைகள் மேசையிற் கிடக்கின்றன. தற்கால சினிமாப்படங்கள் குடும்பவாழ்க்கையைப் பரிகசிக்கின்றன. இன்றையஉலகம் காப்பாற்றப்படவேண்டுமானால் குடும்பம் முதலில் காப்பாற்றப்படவேண்டும். அதற்கு மிகஅவசியமான கருவியைக்கடவுள் நமக்குக்கொடுத்திருக்கிறார். அது குடும்ப செபமாலையே. தீமையைஎதிர்த்துநிற்க அதற்கு மிகுந்தவல்லமையுண்டு. செபமாலையின்வரலாறு அதைநமக்குத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. குடும்பசெபமாலையானது பெருங்காரியங்களைச் சாதிக்க எத்தனமாகிறது.

5. தேவஅழைத்தலைப் பிறப்பிக்கக்கூடிய சிறந்தசாதனம் குடும்பசெபமாலை. ஒரு கத்தோலிக்க விசாரணைப்பங்கில் குடும்பவாழ்க்கை பலவீனநிலையில் இருக்குமானால், அபூர்வமாகத்தான் தேவஅழைத்தல் இருக்கும். கத்தோலிக்கசீவியமும் அவ்வளவு பலமுள்ளதாய் இராது. குடும்பவாழ்க்கை பலப்படுத்தப்படுமானால், கத்தோலிக்கசீவியம் அந்தவிசாரணைப்பங்கில் செழித்தோங்கும். அநேகர் கடவுளின் அழைப்புக்குச் செவிசாய்ப்பார்கள். ஆதலின் உங்கள்உள்ளத்தின் பாசறையையும், இல்லத்தையும் திருச்செபமாலையின் இராக்கினியான மாமரிக்குத் திறந்துவிடுங்கள்.

## கத்தோலிக்க சமயமும் கம்யூனிஸமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாசிமாதம் 2-ந் திகதி 11-ம் பத்திநாதர் கடிதம் எழுதினார். அக்கடிதத்தின் பெரும்பாகம் அவர்களுக்காகவேண்டிக்கொள்ளும்படி கேட்டதே. 1937-ம் ஆண்டு பங்குனி மாதம் கம்யூனிஸத்தைப்பற்றிப் பெரிய நிருபம்ஒன்று அதே பாப்பானவரே எழுதினார். முடிவில் ருஷியாவுக்காகச் செபம். ஒவ்வொரு பூசைமுடிவிலும் ருஷியாவுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம். 1952-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ம் பத்திநாதர் ருஷிய மக்களுக்கு வானொலியில் சமாச்சாரம் அனுப்பினார். அதிலே அவர்கள்மட்டில தமக்குள்ள அன்பைப் பொழிந்தார். ருஷியாவின் மேலாவது பகையில்லை. அவர்கள் நாசமாய்ப் போகாது, ஆண்டவரின் ஆக்கினைக்கு ஆளாகாது மனந்திரும்பத்தான் வேண்டுகிறோம்.

கத்தோலிக்கராகிய நாம் கம்யூனிஸ்தர்கள்மேல் பழிவாங்க அனுப்பப்பட்டதூதர்கள்என்று எண்ணினால் அது மகாப்பெரும் தவறு. நமது நிலைஎன்ன? நமது எண்ணம்என்ன? கிருமிகள் ஓர் உடலில்நுழைந்து வியாதியை உண்டாக்கி விட்டன. அவைகள் உடல்முழுதும் பரவி விட்டன. அதனால் உடல்முழுவதையும் காப்பாற்றவேண்டும். தற்சமயம் உலக முழுவதும் தீமை பரவியிருக்கிறது. அந்தத்தீமையின்—வியாதியின் கூறுதான்—அடையாளந்தான் கம்யூனிஸம். கிறீஸ்துவசிந்தை நம்மிடம் இருக்குமேயானால், பாவ உலகில் நமக்குப் பங்கு உண்டு என்று உணரவேண்டும். மனுக்குலம் ஒன்று. நாம்எவ்வளவுக்கு மாசற்றவர்களோ, அவ்வளவுக்கு உலகின்பாவதோஷத்தை உணரவேண்டும். நமது ஆண்டவர் மாசற்றவர். உலகின்பாவங்களைத் தம்மேல் சுமந்துகொண்டார். நாம்செபத்திலும், தபத்துறையிலும் இறங்கவேண்டும். தற்சமயம் அதிக நன்மையைப் பயக்கக்கூடிய எண்ணம் யாதெனில், "நமக்குரிய கிறீஸ்துவ கடமைகளை நாம் நிறைவேற்றாததுதான் உலகின் தீமைக்கும், துன்பத்திற்கும் பெருங்காரணம்" என்பதே.

---

— சமீபத்திலே உலகின் மகாஉன்னதமான எவறெஸ்ற் சிகரத்தின்மேல்ஏறி உலகப்பிரசித்திபெற்ற சேர் எட்மண்ட் ஹில்லறி, திரு. ரென்சிங் எனுமிருவரும் அச்சிகரத்திலே 27,000 அடி உயரத்திலுள்ள கஷ்டமானபகுதியில் ஏறும்போது ஓர்வித மாயப்பறவைகளைக் கண்டதாகத் தெரிவிக்கின்றனர். அங்கே இவர்கள்கண்ட சீவபிராணிகள் இவைதானாம்.

* * *

— நிகழும் 1953-ம் ஆண்டின் தொடக்கத்திலே உலகமுழுவதிலும் 7 கோடியே 61 லட்சம் மோட்டார் ரதங்கள் பாவனையில் இருந்துவந்ததாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இத்தொகை முந்திய வருடத்திலும் 3 கோடியே 30 லட்சம் ரதங்களால் அதிகரித்துள்ளதாகும். உலகின் அரைவாசிக் குடிசனங்களை அடக்கிய ஆசியாவிலே உலகிலுள்ளகார்களில் ஐம்பதில் ஒருபங்கே இருந்துவருகிறது.

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சிலதினங்களாகச் சற்றே அமர்ந்திருந்த காற்று திரும்பவும் புயலைப் போல மும்முரமாகவீசிக்கொண்டிருக்கிறது. குளிரோடுசேர்ந்ததாய் இருப்பதாலே தடிமன் அதிகமாகத் தலைகாட்டுகின்றது. மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படுகின்றது.

### சீன இறக்குமதிவியாபாரம்

செஞ்சீனாவிலிருந்து இலங்கையின் இறக்குமதி வியாபாரம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டு வருகின்றது. பெருந்தொகையாக இலங்கைக்குத் தேவைப்படும் அரிசியைமாத்திரமல்ல, ஆனால், பச்சைப்பயறு, வெள்ளைப் பூண்டு ஆதியவற்றையும் செஞ்சீனா அதிகமாக உதவிவருகின்றது. சென்ற வைகாசிமாத இறுதிவரையிலே 25 லட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான பச்சைப்பயறும், 5 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான வெள்ளைப்பூண்டும் சீனாவிலிருந்து இறக்குமதியாயின. இலங்கைக்குத்தேவைப்படும் பச்சைப் பயற்றிலும், வெள்ளைப் பூண்டிலும் இவைகள் மூன்றில்இரண்டு பாகமாகும். சமீபகாலமுதல் அங்கிருந்து புடவைகளும், கற்பூரம், கந்தகம், கற்கண்டு, மருந்துச்சரக்குகளும் இறக்குமதியாகி வருகின்றன.

### புகையிலைத் தூதுக்கோஷ்டி

திருவிதாங்கூரிலே யாழ்ப்பாணப் புகையிலைக்கு இறக்குமதித்தீர்வை அதிகம்ஏற்றப்பட்டதையிட்டு இந்தியஅரசாங்கத்தைக் கண்டுபேசவிருக்கும் தூதுக்கோஷ்டி இம்மாதம் 11-ந்திகதி கொழும்பிலிருந்து ஆகாயவிமானத்தில் புதுடில்லிநகருக்குச் செல்லுமெனத் தெரியவருகிறது. தந்தி – சமாச்சார மந்திரியார் திரு. எஸ். நடேசன் அவர்களும், கமத்தொழில்மந்திரி காரியாலய பாராளுமன்ற காரியதரிசியான திரு. வி. குமாரசாமி அவர்களும, யாழ்ப்பாண–மலையாளப் புகையிலைக் கூட்டுறவு விற்பனவுச்சங்க தலைவரான திரு. ரி. சி. இராசரட்ணம்அவர்களும், அரசாங்க வர்த்தகப்பகுதியைச்சேர்ந்த திரு. எல். ஈ. ஏ. பீரிஸ்அவர்களும், கோஷ்டியின்காரியதரிசியாகக் கூட்டுறவுச்சங்கங்களின் உதவிக்காரியதரிசியான திரு. ஆர். சி. எஸ். குக்அவர்களும் இந்தக்கோஷ்டியிலே அடங்குவார்கள்.

### சிகறெற் புகையிலைச்செய்கை

கமத்தொழிற்பகுதியானது சிகறெற் புகையிலை செய்கைபண்ணும் விஷயமாய் யாழ்ப்பாணத்திலே சென்றஐப்பசிமுதல் சித்திரைவரையில் தெல்லிப்பழை, உடுவில், வெம்பாளை ஆதியவிடங்களில் பரிசோதனைகள் நடத்திவந்திருக்கின்றது. இந்தக்கிராமங்களிலே 50 ஏக்கர்நிலத்தில் கமக்காரர் சிகறெற்புகையிலை செய்யலாயினர். இந்தப்பரிசோதனைகள் வெற்றியளித்திருப்பதாலே, மலையாளத்துக்கு ஏற்றுமதிபண்ணுவதற்கெனச் செய்யப்படும் தின்புகையிலைக்குப்பதில் இனிமேல் சிகறெற்புகையிலையைச் செய்கை பண்ணுவது இலாபகரமாகுமென்று கமக்காரர் திடமாக நம்புகின்றார்கள். இன்னும் சிகறெற்புகையிலைசெய்வதிலே தனக்கு உதவிசெய்யுமாறு இலங்கையிலே சிகறெற்தயாரிக்கும் இருகம்பெனிகளையும் கமத்தொழிற்பகுதி அழைத்திருக்கின்றது. அதற்கிசைந்து அவ்விருகம்பெனிகளும் சிகறெற்புகையிலையை உணர்த்தும்சாலைகளை அமைக்கவும், பணஉதவிஅளிக்கவும், புகையிலைவாங்கும் நிலையங்களைத் திறக்கவும் முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.



சதாசகாய மாதாவின் கோணம்

### திருச்செபமாலைப்பத்தி

தேவதாயாரின் பிரமாணிக்கமுள்ள தொண்டர்கள்—அவவுடைய அன்பு மிக்கமக்கள் அனுசரித்துவரும் பத்தி முயற்சிகளில் அதிமுக்கியமானதும், நெடுங்காலமாகத் திருச்சபையில் வழங்கிவருவதுமான பத்திமுயற்சி திருச்செபமாலைப்பத்தி என்பது நீங்கள் அறிந்ததே. இது கல்வி அறிவு நிறைந்தவர்கள், கல்விஅறிவு குறைந்தவர்கள், சின்னஞ்சிறிய பாலர்பாலகிகள்,வாலர்கன்னியர்கள், வயோதிபர்கள் எல்லோருமே எளிதாக அனுசரிக்கக்கூடிய ஒரு பத்திமுயற்சி. இந்தப் பத்திமுயற்சியை வெகுஆர்வத்தோடு எல்லாரும் அனுசரிக்க வேண்டுமென்பது பரிசுத்தமாதாவாகிய திருச்சபையின் ஆசைமாத்திரமல்ல, நமது தேவதாயாரின் தணியாத ஆசையுமாகும். "தேவமாதாவுக்கு மகாபிரீதியை உண்டுபண்ணும் இந்தச் செபமாலைப் பத்தி மூலமாக அந்தத்திருத்தாயாரை இடைவிடாது சங்கித்துவருவோமாக" என்பது திருச்சபையின் போதகம்.

எம்மத்தியில் எழுந்தருளி, எங்களுக்கு உபகாரசகாயஞ் செய்துகொண்டுவரும் மடுப்பதிவாழ்செபமாலைஇராக்கினியை நாம் மகிமைப்படுத்தவேண்டுமெனின், அவவுக்கு நன்றிகாட்டவேண்டுமெனின் எங்கள் மரணபரியந்தம் இந்தச்செபமாலைப் பத்திமுயற்சியை நாங்கள் அனுசரிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியேமாத்திரமல்ல, விசேஷமாக ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொருநாளும் தங்கள்குடும்பங்களில் குடும்பசெபமாலைப் பத்திமுயற்சியை அனுசரித்துவரவேண்டும். இதை எங்கள் மகாவந்தனைக்குரிய மேற்றிராணியாண்டவர் அவர்கள் சென்றவாரம் வெளியிட்டிருந்த திருமுகத்தில் விபரமாகவும், துலாம்பரமாகவும் எடுத்துக்காட்டித் தமதுஞானப்பிள்ளைகளெல்லோரும் குடும்ப செபமாலைப் பத்தியை ஊக்கமாக அனுசரித்துவரவேண்டுமெனத் தூண்டி விட்டிருக்கிறார்.

செபமாலைப்பத்தியானது தமக்கு மகாஆனந்தந் தருவதென்பதைத் தேவதாயார்தாமே பலசமயங்களில் எவ்வித சந்தேகத்துக்கும் இடம்வையாது வெளிப்படுத்தியிருக்கிறார். லூர்துபதியிலும், பாத்திமாபதியிலும் தேவதாயார் காட்சிகொடுத்தபோது செபமாலையைத் தமதுகையில்ஏந்திச் செபிக்கும்பாவனைகாண்பித்து, காட்சிகண்டவர்கள், பாவிகள், பதிதர், அஞ்ஞானிகள் மனந்திரும்பும்படியாகவும் செபமாலைசொல்லும்படி ஏவினார். விசேஷமாகப் பாத்திமாபதியில் இந்தப்பத்திமுயற்சியைத் தேவதாயார் சிபாரிசு செய்து இப்பத்தி தமக்குஎவ்வளவோ பிரீதியைத்தருவதென்று காண்பித்திருக்கிறார்.

பரலோகத்திலிருந்து பூலோகத்துக்குஇறங்கிவந்து செபமாலைப் பத்தியை அனுசரிக்கும்படிகேட்ட செபமாலைநாயகியின் கேள்விக்குச் செவிகொடுப்போமாக! "மங்களம் பிரியபிரசாதபூரணியே" என்ற வாழ்த்துப் பல்லாயிரம்விசை பரலோகத்தைநோக்கிச் செல்லட்டும். வான்முகில்களை ஊடறுத்துத் தேவமாதாவின் சிம்மாசனத்தைநோக்கிச் செல்லட்டும். இது தேவமாதாவுக்கு மெய்யாகவே அக்களிப்பூட்டும். எங்களுக்கும் இகபர நன்மைகள் கிடைக்கும். செபமாலைமாதா எங்களையும், எங்கள் குடும்பங்களையும், தொழில்துறைகளையும் ஆசீர்வதிப்பாவாக.

## 3-ம் வருட மரணஞாபகம்



பிறப்பு: 25—12—27 இறப்பு: 5—7—50

எனது அருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள்மறைந்து இன்றோடு (5-7-53) மூன்று ஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவிபயந்த மணிபெட் டிலையோவெம்
ஆவித் துரைய னணைந்திட்டால்—பூவில்
திறவோ ரறவோருற் றுரைக்கெஞ்
சிற்றேம்
மறவா ததவு மவற்கு.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நித்தியஇளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளும் சுவாமி...சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவர்பிரிவால் துயருறும்
தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை.
பாரியார்: ஸ்ரீமதி செ. துரைரத்தினம்.
சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்றர் மேரி லூமினா (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

**R. I. P.**

---

## மரணசங்கதி

யாழ்ப்பாண டிஸ்திறிக்வித்தியாதரிசியான திரு. நிக்கலஸ் அருட்பிரகாசம் அவர்களின் பாரியாரான திருமதி அருந்ததிநாயகம் சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்றசெவ்வாய்க்கிழமைஇரவு காலஞ்சென்ற துயரசெய்திஅறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். இவரின் பிரேதசேமமானது நேற்றுச்சாயந்தரம் பெருந்திரளான இனசனர், சிநேகிதர்கள் கூடியசமுகத்திலே குருமார்பதின்மர்சமேதராய் வண. பி. ஏ. ஜோண் சுவாமியார் துக்கசங்கீதங்கள்பாடிக் கடைசிஆசீர்வாதங்கூறிநிற்கச் சிறப்பாக நடந்தேறியது. இவரைஇழந்து துன்புறும் நாயகர், சகோதரர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

---

— ஆஸ்திறேலியாவிலே இரண்டாயிரம்பல்கேரியமக்கள் வசித்துவருகின்றார்கள். தங்கள் சொந்தநாடாகிய பல்கேரியாவுக்குத் திரும்பிச்செல்ல இவர்கள் மறுத்துநிற்கின்றார்கள். இரும்புத்திரைநாடுகளில் ஒன்றாகிய பல்கேரியநாட்டின் கம்யூனிஸ்த அரசாங்கம் இவர்கள் அங்கில்லாதபோதிலும் இவர்களுக்கெல்லாம் மரணதண்டனை விதித்துள்ளது.

— வடஅமெரிக்காவிலே ஒவ்வோர் மூன்றுபேருக்கும் ஓர்கார், அல்லது பஸ், அல்லது லொறிவீதம் மோட்டர் ரதங்கள் இருந்துவருகின்றன. அங்கு ஒவ்வோர் மூன்றுகுடும்பங்களுக்கும் குறைந்தபட்சம் இரண்டுகுடும்பங்கள் ஒவ்வோர்காரைக் கொண்டிருக்கின்றன. பலகுடும்பங்கள் ஒன்றுக்குமேற்பட்டகார்களைக் கொண்டிருக்கின்றன.

# பாலர்  பக்கம்

## அண்ணு சொல்வது

அன்பார்ந்த சகோதரங்களே!

பாவச் சோதனைகளை— விசேஷமாய்க் கற்புக்கு விரோதமான சோதனைகளை விலக்குவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

துரிதம் அத்தியா வசியம். அன்றேல் தோல்விதான் முடிவு. நீங்கள்தோல்வி அடைந்தால் கிறீஸ்துநாதர் தோல்வி அடைந்ததாகும். ஆகையால் விழிப்பாய் இருங்கள்.

நீங்கள் பார்த்த ஓர்படமோ, கேட்ட கதையோ, சம்பாஷணையோ பாவச்சோதனைக்குக் காரணம்ஆகலாம். ஆகையால், முதல் செய்ய வேண்டியது என்ன? காரணத்தை விலக்கவேண்டும், சம்பாஷணையை மாற்ற வேண்டும், ஆளை விட்டுவிலக வேண்டும், மறந்துவிட வேண்டும். வேறொரு நல்ல பராக்கை, முயற்சியைத் துரிதமாய்க் கைக்கொள்ள வேண்டும். இதுவே எதிர்ப்பு முறை. இது வெற்றியைத் தரும். ஆயினும் காரணத்தை எப்போதும் விலக்க வேண்டும். சுடு கொழுக்கட்டை மாதிரி உடனே கீழே போடாவிட்டால் கை பொக்களித்து விடும்.

இன்னும், "சீ! அசுத்த அரூபியே, உன் இடமாகிய நரகத்துக்கு ஓடிப்போ. என் ஆண்டவளே, என்தாயாரே! என்னைப் பாதுகாரும்" என்று சொல்லிவிட்டு வேறு நல்ல முயற்சியில் கவனஞ் செலுத்துங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு

## பூஞ்சோலை

1

காலைஇளஞ் சூரியனும் பேரெழிலும் சேருங்
காவினிடை யேபுகுவோம் பாலகனே வாராய்!
சோலைதனில் கோடிமலர்ப் புன்னகையுங் கூடும்
சோபைதனில் இன்பமது சிந்துவதும் பாராய்.

2

வாசனையை வீசிவிடும் வண்ணமலர் கொஞ்சி
வந்துவிளை யாடுமிளம் தென்றலினைப் பாராய்
தேசுமலர்க் கிண்ணமதில் தேங்குமது உண்டு
தீங்கவிதை பாடுமிருள் வண்டினங்கள் பாராய்.

3

இன்னிசையில் பண்ணிசைக்கும் புள்ளினங்கள் பாராய்
எம்மருங்கும் பைந்தளிரின் சாமரங்கள் பாராய்
அன்னமெனும் கன்னியர்கள் நீந்திவிளை யாடும்
அம்புயங்கள் தோன்றுமணிப் பூந்தடங்கள் பாராய்.

4

ஓங்கிவளர் மாமலையின் உச்சிதனில் நின்றும்
ஓடிவிளை யாடியொளி காலருவி பாராய்
மாங்கனிகள் தாங்குகிளை பாய்ந்து குதித்தோடி
மந்தியினம் குந்திவிளை யாடுதலும்பாராய்.

5

எங்குமொளி பொங்குமணந் தங்குமலர்க் காவின்
இன்பமெலாம் சிந்தைகளி கொண்டிடவே பாராய்
தங்கமொழி யாந்தமிழிற் சோலையெழில் பாடித்
தண்ணிழலிற் போயமர்வோம் பாலகனே வாராய்!.

'ஜெயம்'

## என்னைத் தெரியுமா?

1. சுவாபத்தில் நான் முற்கோபக்காரன். ஆனால், என்னை அடக்கி ஆண்டேன். "ஜெனிவாவின் சாந்தமான மேற்றிராணியார்" என்று என்னைச் சனங்கள் அழைப்பர். என் சாந்த குணத்தால் அநேக கல்வினிஸ்தரை மனந்திருப்பினேன். "நூறுபீப்பா வினுகிரியிலும் பார்க்க, ஒருகரண்டி தேனைக் கொண்டு அதிக ஈக்களைப் பிடிக்கலாம்" என்று அடிக்கடி நான் சொல்லி வருவேன். நான்யார்?

2. பிறசமய தெய்வங்களுக்குப் பலி செலுத்த மறுத்தபடியால் நான் சித்திரவதைக்கும், மரணத்துக்கும் தீர்வையிடப் பெற்றேன். மரணிக்கப்போகும் வழியில் ஒரு நியாயாதிபதி என்னைக் கேலிபண்ணி என் பத்தாவின் தோட்டத்திலிருந்து அப்பிள் பழங்களும், ரோசாப் புஷ்பங்களும் வாங்கி அனுப்பும்படி கேட்டான். அப்படியே செய்தேன். அவன் மனந்திரும்பி, வேதத்திற்காக உயிர்விட்டான். நான் யார்?

3. அர்ச். திமிங்கு முனீந்திரன் சபையின் ஓர் திலகம் நான். தேவநற்கருணையைப் பற்றி அநேக கீதங்கள் எழுதினேன். "சும்மா தியோலொஜிக்கா" என்ற வேதசாஸ்திரப் பிரபந்தங்கள் நான் எழுதியவைகளே. பெயர் என்ன?

(1) அர்ச். பிரான்சீஸ் சலேசியார்.
(2) அர்ச். டொறெத்திஅம்மாள்.
(3) அர்ச். அக்குயினுதோமாஸ்.

## ஆமையும் முயலும்

ஒருஆமையும் ஒருமுயலும் சிநேகமாய் இருந்தன. ஒரு நாள் முயல் ஆமையைப் பார்த்து, "நண்பா! பந்தயம் ஓடுவோம் வருகிறாயா?" என்று கேட்டது. முயலின் கேள்வி ஆமைக்குச் சிரிப்பைக் கொடுத்தது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று முயல் ஆமையைக் கேட்டது.

"முன் ஒருநாள் ஒருஆமையும், முயலும் பந்தயம் ஓடியதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே" என்று ஆமை அமைதியாகச் சொன்னது.

"கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தது முயல்.

"அந்தப் பந்தயத்தில் யார் வெற்றி பெற்றார்?"

"ஆமைதான். ஆனால், அந்த முயலைப்போல நான் தூங்குமூஞ்சி அல்ல."

"நீ அந்த முயலைவிடச் சூரப்புலியாக இருக்கலாம். ஆனால், நீ என்னோடு ஒருஅடிகூட ஓடமுடியாது."

"என்ன சொன்னாய்? உன்னோடு ஒரு அடி கூட ஓடமுடியாதா? நீ வெளியே தலைநீட்டாதபடி உன்னைப் பந்தயத்தில் தோற்கடித்து உன்செருக்கை அடக்குவேன்."

"முயல் நண்பா! மூக்கிலே புல்லுக் குத்தினாற்போல் கோபம்கொள்ளவேண்டாம்; பந்தயத்துக்கு நானும் தயாராகி விட்டேன்; பந்தயம் ஓடும் இடத்தை நான் குறிக்கட்டுமா?"

"ஆகா! நீயே குறித்துக்கொள். எத்தனைமைல் வேண்டுமானாலும் ஓடத் தயார்."

"நண்பா! நீ அதிகதூரம் ஓடிக் களைக்க வேண்டாம். சிறிது தூரம் எனக்குப் பின்னாலாவது ஓடினாற்போதும்."

"நண்பனே! உனதுபரிகாசம் இருக்கட்டும்; ஓடும் இடத்தைக் காட்டு."

இதோ! இந்தச்சிறு ஆற்றங்கரையில் இருந்து ஆற்றுக்குக் குறுக்கே மறுகரைக்கு ஓடினாற் போதும்" என்றது ஆமை.

முயல் வெட்கம் அடைந்து ஆமைக்குச் சொல்லாமலே ஓடி மறைந்தது.

'போன்'

## வினையமாய் முடிந்தது

ஓர்ஊரில் ஒருசிறுவன் இருந்தான். மற்றவர்களை ஏமாற்றுவதே அவனுக்கு எப்போதும் ஆனந்தமாய் இருக்கும். அவனைச் சோமு என்று அழைப்பர். ஒருநாள் அவன் நீந்தி விளையாடச் செல்லும்போது: "இன்று கட்டாயம் நான் மற்றப் பையன்களை ஏமாற்ற வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். குளத்தில் இறங்கியதும் "ஐயோ! ஐயோ! உதவி, உதவி" என்று அலறிக் கூச்சல் இட்டான். சமீபத்தில் நின்ற அவன் சிநேகிதர்: "சோமு, நீரில் மூழ்குகிறான்" என்று சொல்லிக் கொண்டு ஓடிச் சென்று நீரில் இறங்கினர். அவனோ தன் தலையைஉயர்த்தி: "நான்உங்களை ஏமாற்றி விட்டேன்" என்று கை கொட்டிச் சிரித்தான். ஒருகிழமையின்பின் மறுபடியும் நீந்தச் சென்றான். இம்முறை தண்ணீர் ஆழமாய் இருந்தது. அதனால் அவன் அதில் மூழ்கத் தொடங்கினான். "ஐயே! உதவி! உதவி!" என்று அலறினான். அவன் அலறியது சிநேகிதருக்குக் கேட்டது. ஆயினும் எவராவது இம்முறை அவனுக்கு உதவிசெய்யப் போகவில்லை. பாவம், சோமு நீரில் அமிழ்ந்தி இறந்தான்.

— து. ஆ.

## என்ன வயது?

யப்பானிலே கலியாணம் ஆகுமுன் மாப்பிள்ளை மணப் பெண்ணைப் பார்ப்பதே இல்லை. கலியாணப் பேச்சு எல்லாம் மாப்பிள்ளை வீட்டுக் காரரும், பெண்பிள்ளை வீட்டுக்காரருமே நடத்தி முடிவு கட்டுவார்கள்.

மாப்பிள்ளையாவது, பெண்பிள்ளையாவது கலியாணம் முடிக்கிறவரையில் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ள முடியாது.

ஒரு யப்பானிய மாப்பிள்ளைக்குக் கலியாணம் முடிந்ததும் தனது மனைவி அதிக வயதானவளாய் இருப்பதைக் கண்டான். உடனே அவளைநோக்கி: "உனக்கு என்ன வயது?" என்று கேட்டான். அவள்: எனக்கு 45 வயது ஆகிறது என்றுசொன்னாள்.

"கலியாணப்பேச்சு நடக்கும்போது உனக்கு 38 வயது என்று அல்லவா உன் தந்தை சொன்னார். உண்மையான வயதைச் சொல்" என்று அவன் மீளவும் கேட்டான்.

உண்மையான வயது 54 என்று சொன்னாள் மணப்பெண். அப்போதும் அவளுடையபதில் அவனுக்குத்திருப்தி அளிக்கவில்லை. எப்படியும் உண்மையான வயதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அப்போது இருட்டுகிற சமயம். திடிரென்று ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் அடடா! இருட்டிக் கொண்டு வந்துவிட்டதே; இருட்டுவதற்குள் உப்புச் சாடியை மூடவேண்டுமே; இல்லாவிட்டால் எலிகள் வந்து எல்லா உப்பையும் தின்று விடுமே என்றான் அவன்.

என்ன எலி உப்பைத் தின்னுமா? ஆச்சரியமாக இருக்கிறதே! நானும் பிறந்து வளர்ந்து அறுபத்தெட்டு வயதாகியும் இந்தமாதிரி யாரும் எலி உப்பைத் தின்னும் என்று சொல்லக் கேட்டதே இல்லை என்றாள் மணப்பெண்.

ப. மேரிறெஜீனு
ந. பெ. பாடசாலை, மன்னார்.

---

வில்லி முதன்முதலாக அன்றுதான் பாடசாலைக்குப் போனான். அங்கே அவன் பகலைக் கழித்துவிட்டு மறுபடி வீடுவந்துசேர்ந்தபோது:

தாய்—பாடசாலையில் என்ன விசேஷம் வில்லி?

வில்லி — அப்படி ஒரு விசேஷமும் இல்லை. ஆனால், 'கண்' என்றதை எழுத்துக்கூட்டத் தெரியாத ஒரு மனுஷி என்னிடம்வந்து கேட்டார். நான் க+ண் என்று எழுத்துக் கூட்டிவிட்டேன்.

* * *

யாசகன்—அம்மா! இரண்டு நாட்களாய் ஒன்றுமே சாப்பிட்டிராத ஓர் மனிதனுக்குத் தயவுசெய்து ஒரு துண்டு கேக் தருவீர்களானால் பெரிய புண்ணியமாயிருக்கும்.

சீமாட்டி — என்ன கேக்கா? ஏன் உனக்குப் பாண்போகாதா?

யாசகன் — நான் வழமையில் பாண் தான் சாப்பிடுகிறேன்; ஆனால், இன்று......

சீமாட்டி—இன்று என்ன இன்று...

யாசகன்—அம்மா, கோபித்துக்கொள்ளாதேயுங்கள்; இன்றுநான் பிறந்த பெருநாள் அம்மா! அதுதான்...

## உங்களுக்குத் தெரியுமா ?

1. எலிசபேத் மகாராணியாரின் உத்தியோகபூர்வமான மாளிகைகள் எவை ?

பக்கிங்காம்மாளிகையும், வின்ஸர் அரண்மனையுமே. பக்கிங்காம்மாளிகை நான்காம்ஜோர்ஜ்அரசரால கட்டப்பட்டது. விக்ரோறியாமகாராணியாரது ஆளுகையின் ஆரம்பகாலத்திலே, இராசவிருந்தாடிகளை உபசரிப்பதற்கென லண்டன்நகரிலே மிகப்பெரிய மாளிகைஒன்று அவருக்குத்தேவைப்பட்டபோது பக்கிங்காம்மாளிகை அவரது உத்தியோகபூர்வமான மாளிகையாகத்தொடங்கியது. இது பென்னம்பெரிய ஓர்மாளிகையாகும். இது லண்டன்நகரின்மத்தியில் இருந்துவருகின்றது. உள்ளபடியே இது பிரித்தானியமக்களுக்கு லண்டன்நகரின் இருதயமாகும்.

2. தற்போது யுத்தம்நடைபெற்றுவரும் கோறியாவில் கத்தோலிக்கசமயம் எவ்விதம்பரம்பியது ?

1770-ம் ஆண்டு ஒருதொகையான கோறிய புத்தசமய வித்தியார்த்திகள் பீக்கிங்நகரிலிருந்து திரும்பியபோது கத்தோலிக்கபோதனைசம்பந்தமானபுத்தகங்களையும் எடுத்துச்சென்று ஆராய்ச்சிசெய்து கிறீஸ்தவர்களானார்கள். அதுமுதல் அங்கு கத்தோலிக்கசமயம் தீவிரமாகப் பரம்பத்தொடங்கியது. ஓர்சீனக்குருவான வண. சூ சுவாமியாரே கோறியாவின் முதற்கத்தோலிக்கமிஷனரியாவர். இவர் 1794-ம் ஆண்டு அங்குசென்று வேதத்தைப் போதித்துவரும்போது உண்டான வேதகலாபனையில் 1801-ம் ஆண்டு வேதசாட்சியாகக் கொல்லப்படலாயினர். அப்போது கோறியகத்தோலிக்கராய் 5,000 பேர்வரையில் இருந்தார்கள். 1838-ம் ஆண்டு மூன்றுபிரான்சிய கத்தோலிக்கமிஷனரிமார் அங்கு சென்றனர். இவர்களும் 1839-ம் ஆண்டு சவூல்நகரில் வேதசாட்சிகளாகக் கொலையுண்டனர். முதலாவது கோறியகுருவானவர் 1845-ம் ஆண்டு குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்று, 1846-ம் ஆண்டு வேதசாட்சியாயினர்.

3. இரண்டாவதுஉலகயுத்தத்தால் உலகத்துக்குஉண்டான கஷ்டநஷ்டங்கள் யாவை ?

போர்முனைகளில் 3 கோடியே 20 லட்சம்ஆடவர்கள் கொல்லப்பட்டார்கள். ஆகாயத்திலிருந்து வீசப்பட்ட வெடிகுண்டுகளால் சுமார் 2 கோடியே 50 லட்சம் இளைஞர்களும், முதியவர்களும், பிள்ளைகளும் உயிரிழந்தார்கள். 2 கோடியே 50 லட்சம்பேர் காவல்முகாம்களில் இறந்தார்கள். 2 கோடியே 95 லட்சம்பேர் காயமடைந்தவர்களும், அசக்தர்களுமானார்கள். 2 கோடியே 12 லட்சத்து 45 ஆயிரம்பேர்கள் தங்கள்சொத்துகள் முழுவதையும் இழந்தார்கள். ஜேர்மனியரும், மத்தியஐரோப்பிய நாடுகளையும், தூரகிழக்குநாடுகளையும் சேர்ந்த மக்களுமாக 4 கோடியே 50 லட்சம்பேர் தங்கள்வீடுகளைவிட்டுத் தப்பியோடினார்கள், அல்லது துரத்தியடிக்கப்பட்டார்கள். யுத்தம் நடந்தேறிய ஐந்துவருடங்களிலும் பிரான்சிலும், இத்தாலியிலும் வசிக்கின்றமக்களின் தொகைக்குச்சரியான குடிசனங்களை உலகம் இழந்துபோயிற்று.

4. இலங்கைப்பிரதமர் திரு. டட்லி சேனநாயக அவர்களுக்கு இப்போது வயதென்ன ?

42. இவர் தமது 42-வது பிறந்த பெருநாளைச் சென்றஆனி 19-ந் திகதி றோமாபுரியிற் தங்கியிருந்தபோது அங்குதான் கொண்டாடினார். இதற்கு முதனாள்தான் அவர் வத்திக்கான் மாளிகைசென்று 12-ம் பத்திநாதபாப்பரசரின் அந்தரங்க பேட்டி பெற்றுக் கொள்ளலாயினர்.

5. கோறியாவிலே யுத்தம் தொடங்கி இப்போது எத்தனைவருடம் பூர்த்தியாகின்றது ?

## பொதுவர்த்தமானம்

### கம்யூனிஸ்தரின் ஆர்ப்பாட்டம்

கம்யூனிஸ்தர்களின் முட்டாள்தனத்திற்கு முத்திரையாக அமைந்த ஒரு செயல்வருமாறு: மஸ்கோ தும்மினால் தான் இங்கிலாந்திலுள்ள கம்யூனிஸ்த பத்திரிகை தனது கைக்குட்டையை உபயோகிக்கும்என்று ஒருமாஜிகம்யூனிஸ்த எழுத்தாளர் கூறினர். சுயசிந்தனை அற்றவர்கள் கம்யூனிஸ்தர்கள். தாங்களாகஒன்றும் நினைக்கவோ, செய்யவோ இயலாதவர்கள். எதற்கும் மஸ்கோஆஞ்ஞையை எதிர்பார்த்துத் தங்கள்மூளையை அடகுவைத்துநிற்கும் ஆமாஞ்சாமிகள். அதிலும் இந்தியகம்யூனிஸ்தர்களின் மூளையே தனிரகம். இவர்கள் பிரித்தானியஅரசியின் முடிசூட்டுவிழாக் கொண்டாட்டத்திலே இந்தியகப்பற்படை கலந்துகொள்வதை எதிர்த்துஒலமிட்டு ஏதேதோவெல்லாம் பேசிக் கடைசியாகஎல்லோரது நகைப்புக்கும் ஆளானார்கள். எப்படித்தெரியுமா? இவர்கள் இந்தியாவைப்பற்றித் தூஷித்துக்கொண்டிருந்த அதேசமயம் ருஷியகப்பற்படையும் முடிசூட்டுவிழாவில் கலந்துகொள்ளும்என்று மஸ்கோ அறிவித்தது. அவ்வளவுதான், அப்புறம் ஏன் தோழர்கள் வாயைத்திறக்கிறார்கள்? மூக்கறுபட்டு வாயடைத்துக் கிடக்கிறார்கள்!

### ஜனாதிபதியின் பௌத்திரி

அமெரிக்கஐக்கியதேச ஜனாதிபதியாய் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. பிறங்லின் ஹூஸ்வெல்ற் அவர்களின் பேர்த்தியாரான திருமதி சாரா டெலானோ றூஸ்வெல்ற் அத்தேசத்திற் போய்க் குடியேறிய ஓர்நாவிதனின்மகனான அந்தோனி டி பொனவெந்துரா என்பவரைச் சமீபத்திலே நியூயோக் நகரில் திருமணஞ்செய்திருக்கின்றாள். அங்கு மன்ஹற்றன்எனுமிடத்திலுள்ள சிறிய றோமான்கத்தோலிக்க கோவில் ஒன்றில் இதுநடந்தேறியது. மணவாளனின்தந்தை தனதுநாவிதர்சாய்ப்பை இன்றுமே நடத்திக்கொண்டிருக்கிறார். மணவாளியான சாரா டெலானோ றூஸ்வெல்ற் 7 கோடியே 50 லட்சம் டலர் பெறுமதியான சொத்துகளை உடையவள். மணவாளன் பியானோ வாத்தியம் மீட்டுவதிலே சிறந்ததேர்ச்சி பெற்றவர். இவர் கேட்டிஸ் சங்கீதகல்லூரியிலே சங்கீதம்பயின்றுவரும்போது மணவாளிஅங்குள்ள பிறைன் மோர்கல்லூரியிலே படித்துவந்தாள். அப்போதேஇருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

### சோவியற்அரசின் கரிசனை

கல்வி, கைத்தொழில், கமத்தொழில் ஆகியவற்றிலே விருத்தியடையாத பிற்போக்கான நாடுகளுக்கு உதவிசெய்யும் 1953-ம் ஆண்டுத் திட்டத்திற்கெனச் சமீபத்திலே அமெரிக்கவரசு ஐக்கிய நாடுகளின்ஸ்தாபன பிரதமகாரியதரிசியிடம் தனதுபங்குத்தானத்திலே முதலாம்பகுதியாக 60 லட்சம்டலர் பெறுமதியான செக்ஒன்றைக் கையளித்தது. இப்பணம் பிற்போக்கானநாடுகளுக்குத் தொழில்நுட்ப உதவிசெய்வதற்காகும். இத்திட்டத்திற்கென உதவிசெய்ய முன்வந்துள்ள 64 நாடுகளுள் கம்போடியா, இலங்கை, பின்லாந்து, சுதந்திரமேற்கு ஜேர்மனி, இத்தாலி, யப்பான், கோறியா, லாவோஸ், மொனக்கோ, சுவிற்சர்லாந்து, வியெற்னும்என்பன ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கம் வகிப்பனவன்று. ஆனால், சோவியற் அரசும், அதன்தோழநாடுகளும் பிற்போக்கானநாடுகள்மட்டிலே மிகுந்த கரிசனை காட்டுவனபோல் பாசாங்கு செய்து கா, கூவென்று ஊத்திக்கூச்சலிட்டபோதிலும் உதவிசெய்யவேண்டிய சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் கையைவிரித்துக் கண்ணை மூடிவிடுகின்றன.

---

சென்ற 25-ந் திகதி வியாழக்கிழமையுடன் மூன்றுவருடம் பூர்த்தியாயிற்று.

## கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

### 1953 வைகாசி, ஆனி இலாப உபகரிப்பு

| இலக்கம் | வருஷம் | பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|---|---|
| 382(எ) | 12 | சலமோன் விக்ரோறியா | யாழ்ப்பாணம் | 300-00 |
| 353(எ) | 12 | பிலிப்பையா எலிசபேத் | யாழ்ப்பாணம் | 300-00 |
| 457(எ) | 11 | ம. நட்சேஸ்திரம் மிரண்டா | பேசாலை | 250-00 |
| 147(எ) | 12 | வேலுப்பிள்ளை நிச்சாட் | முல்லைத்தீவு | 300-00 |
| 2820 | 10 | வி. எம். ஜெமேயின் | அச்சுவேலி | 210-50 |
| 2626 | 10 | வயித்தியான் யோவாம்பிள்ளை | அரிப்பு | 205-00 |
| 2673 | 9 | வி. வறோணிக்கா லோகு | பேசாலை | 175-00 |
| 3448 | 8 | மரியார் மரியைப்பிள்ளை | ஊறணி | 150-00 |
| 3465 | 8 | சந்தியா அந்தோனிப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 150-00 |
| 3528 | 7— | அந்தோனி திரேசியா | பேசாலை | 140-00 |
| 3639 | 7 | சின்னத்தம்பி அந்தோனிப்பிள்ளை | புங்குடுதீவு | 140-00 |
| 2981 | 9 | ஏ. ரி. சாமுவேல் சில்வா | வங்காலை | 156-75 |
| 3252 | 11 | மனுவேல்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை | சில்லாலை | 250-00 |
| 1977 | 11 | கபிரியேல்பிள்ளை செல்வத்துரை | பாண்டியந்தாழ்வு | 250-00 |
| 2232 | 11 | அந்தோனி ஆரோக்கியம் | யாழ்ப்பாணம் | 239-25 |
| 2726 | 10 | மனவல் அன்னம்மா | கரையூர் | 205-00 |
| 432(எ) | 11 | அப்புலோனியா பிலிப்ஸ் | கரையூர் | 240-00 |
| 124(எ) | 12 | இருதயமுத்து சவிரிமுத்து | ஊர்காவற்றுறை | 300-00 |
| 2902 | 10 | ஆறுமுகம் சவிரிமுத்து | மன்னார் | 201-40 |
| 2069 | 11 | வேனுட் ஞானப்பிரகாசம் | யாழ்ப்பாணம் | 242-46 |
| 2652 | 10 | வயித்தி மத்தேசு | அச்சுவேலி | 205-00 |
| 3541 | 7 | யோசெவ் டானியேல் | முல்லைத்தீவு | 140-00 |
| 3723 | 7 | மனுவேல்பிள்ளை அன்னம்மா | கரம்பன் | 140-00 |
| 287(எ) | 12 | பேதுருப்பிள்ளை மரியாம்பிள்ளை | நாரந்தனை | 300-00 |
| 2551 | 10 | எஸ். எம். இராசையா | கரம்பன் | 205-00 |

கைகண்டபலன். இலாபத்தைக்கண்டும் தாமதிக்கலாமா? நீங்களும் இச்சங்கத்திற் சேருங்கள். உங்கள்அயலவரையும் இதிற் சேர்த்துவிடுங்கள். யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க குடும்பங்கட்குக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை அலட்சியம் செய்யாதிருங்கள். விபரங்கட்கு மேல்வரும் விலாசத்துக்கு எழுதுக.

காரியதரிசி
கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்
சந்தியோகுமையோர் கோவில்,
யாழ்ப்பாணம்.

---

புத்தக மதிப்புரை

## பலித்த கனவு

ஆசிரியர்: அ. யோஸப் உத்தரியம். பக்கம் 142. விலை 12 அணா. கிடைக்கும் இடம்: தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.

இந்நூல் இனிமையும் எளிமையும் அமைந்த தெள்ளியதமிழில் விறுவிறுப்பானநடையில் யோசேப்பின் வாலாற்றை விளக்குவது. தூத்துக்குடித் துணைமேற்றிராணியாரின் அணிந்துரையுடன் கூடியது. ஆண்டவரவர்கள் கூறுகிறபடி வாசகத்திற்கும், நாடகத்திற்கும், வெள்ளித்திரை வெளியீட்டிற்கும் உதவும்என்று நம்புகிறோம்.

---

### பிரான்சிய புதியபிரதமர்

பிரான்சியபிரதமராக இருந்துவந்த எம். றெனே மேயர்அவர்கள் சென்ற வைகாசி 21-ந் திகதியன்று தம் பதவியை இராசினாமாச் செய்தது முதல் மந்திரிசபையோ, அன்றேல் பிரதமமந்திரியாரோ இல்லாதிருந்த பிரான்ஸ் கடைசியாக 36 தினங்களுக்குப்பின் 63 வயதுடையவரான எம். யோசெவ் லனியெல் என்பவரைப் பிரதமராகத்தெரிந்திருக்கிறது. தேர்தலில்இவருக்கு 398 வாக்குகள் கிடைத்தன. அதாவது குறைந்தபட்சம் கிடைக்கவேண்டிய 314 வாக்குகளிலும் 84 வாக்குகளால் இத்தொகைகூடுதலானது. கம்யூனிஸ்தரும், சோஷலிஸ்தருமான 206 பிரதிநிதிகளும் இவருக்கு எதிராகவே வாக்களித்தார்கள். தெகோலின்கட்சியினருள் பெரும்பான்மையினர் இவருக்கேவாக்களித்தனர். தெகோலின்கட்சியினர் அரசாங்கத்தில் அங்கம்வகிப்பது இதுவே முதன்முறையாகும். அதனால் புதிய பிரதமர் யுத்தத்துக்குப்பிந்திய 19-வது மந்திரிசபையை ஆக்கியிருக்கின்றார். பிரதமர்பதவிவகிக்குமாறு பிரான்சிய ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட எட்டாம்ஆள் இவராவர்.

## சுற்றுப்பிரயாணம்

பேசாலை, பாத்திமா ஆண்பாடசாலையிலிருந்துசென்ற (16-6-53) ஞாயிறன்று ஆசிரியரும், மாணவருமாகப் புறப்பட்டுச்சென்ற ஐம்பதுபேரடங்கிய சுற்றுப்பிரயாணக் கோஷ்டி தனது பிரயாணத்தைத் திருப்திகரமாக முடித்துக் கொண்டு 19-6-53 வெள்ளிக்கிழமை திரும்பியது. அவர்கள் மருதமடு, பொலநறுவை, மட்டக்களப்பு, கல்முனை, கல்லோயாவேலைத் திட்டப்பகுதி, திருக்கோவில், மொனறாகலை, வெள்ளாவை, அப்புத்தளை, பண்டாரவளை, ஹக்கலை, நுவரெலி, ஹற்றன், மஸ்கேலியா, வட்டவளை, தம்பளை, பேராதனை, கண்டி, மாத்தளை, கம்பளை, சிகிரியா, ஹபறனை, திரிகோணமலை, மிகுந்தலை, அனுராதபுரம் எனுமிடங்களிலுள்ள புராதன, தற்கால சரித்திரப்பிரசித்திபெற்ற இடங்கள், பூந்தோட்டங்கள், விளைபொருட்கள், உற்பத்திச்சாலைகள், நிர்மாணத்திட்டவேலைகள், தொல்பொருட்சாலைகள் முதலியவற்றைப்பார்த்துச் சரித்திர, பூமிசாஸ்திர, கலாஞான அறிவை வளர்ச்சியுறச் செய்து திரும்பினர். அந்தந்தஇடங்களைத் தரிசித்தபோது அவற்றின் வரலாறு, முக்கியத்துவம், பாதைஅமைப்பு, விவசாயவிருத்தித் திட்டம் முதலியவைகளை ஆசிரியர்கள் விளக்கிக்காட்டினர். மாணவரும் தங்கள்குறிப்புப்புஸ்தகங்களில் பார்த்தஇடங்கள், சம்பவங்களைப்பற்றிய குறிப்புகளை வரைந்து கொண்டனர். இந்தச் சுற்றுப்பிரயாணம் திருப்தியாக நடைபெறுவதற்கு உதவியாயிருந்த திரு. சூசைலெம்பர்ட், திரு. அந்தோனிக்குரூஸ்விதானையார் ஆகியோருக்கு நமது நன்றிஉரித்தாகுக!

— நிருபர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அண்டிவந்தோர்க்கு அயராது அருள்புரியும் பாத்திமாமாதாவினதும், அர்ச். அந்தோனியாரினதும் வேண்டுதலினால் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைத்தது. நன்றியறிதலாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களுடையநாமங்கள் எங்கும் புகழப்படுவதாக!

S. T.

# மூவர் ஆலோசனை மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்துயிரளிக்கப்பார்க்கின்றனர் என்றெல்லாம் அவநம்பிக்கைப் படுவது சரியன்று; ஜனநாயகத்தையும் தமது சுதந்தரத்தையும் காக்க மனமுள்ள நாடுகளுக்கு அமெரிக்கா தன்னாலியன்ற உதவிசெய்யத் தயங்காதென்று இவர் அறிவித்துள்ளார்.

இதுவே ஜனதிபதி ஐஸன்ஹாவரின் கருத்துமாகும். கம்யூனிஸத்தைப் பரவவிடாது தடுப்பதுமட்டும் போதாது; அதினின்று உலகநாடுகளை விடுதலை செய்யவும் வேண்டுமென்பது இவருடைய கொள்கை. இவர் வட அத்திலாந்திக் சமுதாயத்தின் பிரதம தளகர்த்தராயிருந்தவர். கோரியாப் போரை நிறுத்துவேன் என்று உறுதிகூறிப் பதவியை ஜெயித்தவர். ஆகவே, மேற்கிலும் கிழக்கிலும் போரின் காரணங்களைக் களைந்தெறியவேண்டும் என்ற கருத்துள்ளவர். எனினும் ருஷியா உண்மையிலேயே அமைதியை நாடுகிறதென்பதற்குத் தனது மனமாற்றத்தின் அறிகுறியாக நடத்தையில் நிரூபித்தாலன்றி அதனை நம்பலாகாதென்று கூறுகின்றார்.

இதற்கிடையில் கடந்த வைகாசி மாதம் 11-ம் நாள் சேர். சேர்ச்சில் ஓர் பெரும் சொற்பொழிவாற்றினர். இதில் அவர் ருஷியாவின் நியாயமான கோரிக்கைகள் சில உள்ளனஎன்று ஒப்புக்கொண்டார். 1941-ம் ஆண்டு ஹிற்லர் தாக்கியது போல மீண்டும் நிகழக்கூடாதென்று ருஷியர்கள் கோருவது நியாயம். எனவே, உலக வல்லரசுக்கள்கூடித் தமக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வது உசிதம் என்றார் சேர்ச்சில். இதற்கு ஜனதிபதி ஐஸன் ஹாவரும் இசைந்துள்ளார். இம்மாதம் 8-ம் நாள் அமெரிக்க, பிரான்சிய, பிரித்தானிய தலைவர்கள் பேர்மியுடா தீவில்கூடி ஒருவாரமாகத் தமக்குள் கலந்தாலோசிக்கவிருந்தார்கள். ஆனல், சேர். சேர்ச்சில் அவர்களுக்கு மிதமிஞ்சிய வேலைகாரணமாக ஏற்பட்டுள்ள சுகவீனத்தையிட்டு இந்த ஆலோசனைமகாநாடு பின்போடப்பட்டுள்ளது.

---

## புத்தக மதிப்புரை

# மாரியும் உண்டு

ஆசிரியர் வி. மரியஅந்தோனி, M.A. பக்கம் 131. விலை: உயர்நிலைப்பதிப்பு 2—0—0. மலிவுப்பதிப்பு 1—4—0. கிடைக்குமிடம் தமிழ் இலக்கியக் சழகம், தூத்துக்குடி.

இந்நூல் கடையெழுவள்ளல்களுள் தலைசிறந்தவனான பாரியின்வரலாற்றை, சங்கச்செய்யுட்கள்பலவற்றை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. இனிய செந்தமிழ்நடையுடன் கூடிய இவ்வாராய்ச்சிநூலால் ஆசிரியர்திறன் நன்குவிளங்கும். பலநூல்களிலிருந்தும் மேற்கோள்பல எடுத்துக்காட்டி விளக்கம்கூறும்முறை மெச்சத்தகுந்தது. உயர்நிலைப்பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், தமிழறிஞர்களுக்கும் ஏற்றஇந்நூல் எல்லோராலும் பாராட்டற்குரியது.

# நானா சங்கதிகள்

— அதிகதூரத்திலிருந்து குறித்த இலக்குகளைநோக்கிச் செலுத்தப்படும் எறிஆயுதங்கள், எறிகுண்டுகளைச் செய்வதற்கென்று தற்போது ஆரம்பமாகியிருக்கும் தனதுபுதிய அரசிறைவருடத்திலே அமெரிக்கவரசு 100 கோடிடலருக்குமேல் செலவிடவிருப்பதாய் வாஷிங்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இதுவிஷயமாய்ச் சோவியற்அரசு ஜேர்மன்விஞ்ஞானிகளின் புத்திவன்மையைப் பிரயோகித்து அதிகமான எறியாயுதங்கள், எறிகுண்டுகளைச் செய்யக்கூடிய நிலைமையில்இருப்பதே அமெரிக்கவரசின் இந்த நடவடிக்கைக்குக் காரணமாகும்.

— சோவியற்ருஷியாவிலே இதுவரை பிரயாணிகள்எவரும் கால்வைக்கப்படாதென விலக்கப்பட்டிருந்த பெரும்பகுதிகள் அங்குள்ள பிறநாடுகளின் இராஜீயப்பிரதிநிதிகளும், மற்றும் பிறநாட்டினரும் தரிசிக்கத் திறந்துவிட்டிருப்பதாய் மஸ்கோவிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிறநாட்டினர் தரிசியாது கடந்த 18 மாதங்களாகக் கண்டிப்பாகவிலக்கப்பட்டிருந்த லெனின்கிறாட், ஸ்ராலின்கிறாட், ஒடெசா, திபிள்சிஎனும் நான்குநகரங்களும் இப்போது பிறநாட்டினர்தரிசிக்கத் திறந்துவிடப்பட்டிருக்கின்றனவாம்.

— அமெரிக்க ஐக்கியதேச போட்வேய்ன்நகரிலே தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் 143 பெண்மணிகள் கடந்த மூன்றுவருடங்களாகத் தங்கள் செலவைக்கட்டுப்படுத்திச் சேகரித்த பணங்கொண்டு இரு ஆகாயவிமானங்களை வாடகைக்குஅமர்த்தி அவற்றிலே இம்மாதம் 25-ந் திகதி லண்டன்நகர் சென்று அங்கே எலிசபேத்மகாராணியாரினதும், பின்னர் றோமாபுரிசென்று பரிசுத்தபாப்பரசரினதும் பேட்டிபெறவிருக்கின்றார்கள். இடையிலேஇவர்கள் ஒல்லாந்துதேச மாஜி வில்ஹெல்மினா இராணியாரையும் சந்திப்பார்கள்.

— சான்பிரான்சிஸ்கோநகரிலே கடிகாரஞ்செய்கிறவரான பீற்றர் குளக்மன் எனும் 27 வயதுடையவாலிபர் ஒரே தனிஆசனத்தையும், 35 அடிநீளச் சிறகையும்உடைய சிறு விமானம்ஒன்றில் சென்றவெள்ளிக்கிழமையன்று அத்திலாந்திக் சமுத்திரத்தைக்கடந்து லண்டன்நகர் போய்ச்சேர்ந்து அங்கு வசிக்கும் தனதுபெற்றோரைச் சந்திக்கலாயினர். இதற்காகவே இப்பிரயாணத்தை அவர்நடத்தினர். இதுவரை அத்திலாந்திக் சமுத்திரத்தைக்கடந்த ஆகச்சிறியவிமானம் இதுதானும்.

— உலகில் மகா உந்நதமானதாய் இமயமலையிலுள்ள எவறெஸ்ற் சிகரத்தின்மேல்ஏறி அதனைவெற்றிகொண்ட பிரித்தானிய ஆராய்ச்சிக்கோஷ்டியின் தலைவரான கர்ணல் ஜோண் ஹண்ற் அவர்கள் பற்னநகரில் சென்றபுதன்கிழமை பேசியபோது: இமயமலையிலேயே உலகின்மூன்றாவது மகாஉந்நதமும், 28,146 அடி உயரமுமுடையதாய் இன்னுமே வெற்றிகொள்ளப்படாத கன்சென்ஜங்கா சிகரத்தின்மீதும் தாங்கள் ஏறவிரும்புவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

— சுவாசப்பையில் ஏற்படுகின்ற ‘கான்சர்’என்ற புற்றுநோய்க்கும், சிகறெற் புகைப்பதற்குமிடையே மிக நெருங்கிய சம்பந்தம்இருப்பதாக எண்பித்து அமெரிக்கஐக்கியதேசத்திலே விரைவில் ஓர்புத்தகம் வெளிவரவிருக்கின்றது. புகையிலைச்சுருட்டு, அல்லது சுங்கான்புகைப்பதற்கும், சுவாசப்பைப் புற்றுநோய்க்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று அங்குள்ள நிபுணர்கள் கண்டறிந்திருக்கின்றனராம்.

— பிரித்தானியிலே சென்றவைகாசி மாதத்தில் முன்னர் எந்தமாதத்திலும் இல்லாதவிதமாய் அத்துணை மிகப் பெருந்தொகையானகார்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சென்றமாதம் அங்குகட்டிமுடிக்கப்பட்ட கார்களின் தொகை 50,600. அதாவது 15 நிமிஷத்துக்கு ஒன்றுவீதமாகும். இதற்கு முன் 1950-ம் ஆண்டு கார்த்திகையில் தான் முன்னில்லாதபெருந்தொகையாக 46,600 கார்கள் கட்டப்படலாயின.



# சிலோன்

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய போலிஸி!
ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
போலிஸி!



தலைமை ஆபீஸ்: 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன்: 6241, 6242, 6243.

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நூரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருணாகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

தி சிலோன் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிட்.

கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும்:
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.



# கத்தோலிக்கு கீர்த்தனைமாலை

| | | | ரூ. ச. |
|---|---|---|---|
| தமிழ்க் கீர்த்தனைகள் | (நோட்டில்லாமல்) | .... | 75 |
| லத்தீன் கீர்த்தனைகள் | (நோட்டுகளுடன்) | .... | 2-25 |
| தமிழ்க் கீர்த்தனைகள் | (நோட்டுகளுடன்) | .... | 2-25 |
| தமிழ், லத்தீன் கீர்த்தனைகள் | (நோட்டுகளுடன்) | .... | 4-75 |

குறிப்பு:— தேவைப்படுவோர் முழுவிபரந்தெரிவித்து எழுதுக.

கிடைக்குமிடம்:—

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அண்டிவந்தோர்க்குத் தவறாது அருள்புரியும் சதா சகாயமாதாவினதும்—பரிசுத்த பாத்திமாமாதாவினதும் இரக்கத்தினாலும், கோடியற்புதரின் மன்றாட்டினாலும் நான்கேட்ட அநேகமன்றாட்டுக்கள் கிடைக்கப்பெற்றேன். அவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக. இதற்கெல்லாம் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவித்து நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

மாதகல் T. A.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின்திருஇருதய இரக்கத்தாலும் அர்ச். சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் ஆகியோரின் சலிகையாலும் என்மகளுக்குச் செய்யப்பட்ட சத்திரவைத்தியம் யாதொரு பொல்லாப்பும் இல்லாமல் சுகமேமுடிந்தது. இவர்கள் நாமம் வாழ்த்தப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

A. A.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 2-1953